www.padippakam.com
இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.O

புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පූදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 32 | 20 கார்த்திகை 1996 | விலை: ரூபா 7.00

# வவுனியா அகதிகள்



## கோழி ஒரு கூட்டிலே சேவல் ஒரு கூட்டிலே கோழிக்குஞ்சு ரெண்டும் இப்போ கண்காணாத காட்டிலே

வவுனியாவிலுள்ள அகதி முகாம்களில் புதிதாக பிரச்சினைகள் உருவாகி உள்ளன. தண்ணீர், சுகாதாரம், உணவு ஆகியன பூதாகாரப் பிரச்சினைகளாக உருவாகி உள்ளன. ஒக்டோபர் 22ந்திகதி வந்தவர்கள் இன்னும் முகாம்களில் கைதிகள் போல் வாழ்கிறார்கள்.

அவர்களுடைய உற்றார் உறவினர் கூட முட்கம்பி வேலியூடாகத்தான் தற்போதும் பேசுகிறார்கள். வவுனியாவில் அடைத்து வைக்கப்பட்டுள்ள மக்களில் அநேகமானோர் நோயாளிகள் போன்ற தோற்றத்துடனேயே காணப்படுகிறார்கள்.

அவர்கள் ஏன் அடைக்கப்பட்டிருக்கிறோம், எப்போது விடுதலை செய்யப்படுவோம் என்பதனை புரியாதவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

அடுத்து என்ன நடக்கப்போகிறது என்பது கூட அவர்களுக்குத் தெரியாது.

ஆனால் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள தகவல் தொடர்புச் சாதனங்கள், 'அங்கு மக்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது; மக்கள் சுதந்திரமாக வாழ்கிறார்கள்; மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள்' என்று பிரச்சாரம் செய்கிறது. முட்கம்பி வேலித் தடைகளுக்கு அப்பால் நின்று கணவனும் மனைவியும் தாயும் பிள்ளையும் பேசும் நிலவரம் மாத்திரம்தான் அங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

நாளாந்தம் தமது பிள்ளைகளை உற்றார் உறவினர்களைத் தேடி முகாம்களுக்கு அலைவதிலேயே பலர் ஓடாகத் தேய்ந்து விட்டார்கள். நோய்ப்பிணிக்கு ஆட்பட்டு விட்டார்கள்.

வவுனியா ஆதார வைத்தியசாலை நிரம்பி வழிகிறது. தாழ்வாரங்களிலும் மலசலகூட வாசல்களிலும் நோயாளிகள் படுத்திருக்கிறார்கள்.

அகதிமுகாம்களிலிருந்து நாளாந்தம் வரும் நோயாளிகளையே தாக்குப்பிடிக்க முடியாது திணறுகிறது வைத்தியசாலை.

ஆனால் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு வெளியே உள்ள சகல வடபகுதி மக்களுக்கும் ஒரே ஒரு ஆதாரமாக இந்த வைத்தியசாலைதான் காணப்படுகிறது.

யுத்த காரணங்களுக்காக அத்தியாவசிய மருந்துச்சாமான் கூட அரசின் கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளுக்கு அனுப்பப்படுவதில்லை.

தொடர்ச்சி 4ம் பக்கம் ☞

படிப்பகம்

www.padippakam.com



# கண்ணோட்டம்

## அரசும், தலைமையும் நீதியாக நடந்துகொள்ள விரும்பினால்...

சத்ஜய-1,-2 இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து கிளிநொச்சியில் இருந்த மக்கள் அனைவரும் அகதிகளாயினர். ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் இருந்து அகதிகளாக வந்தவர்களும் கிளிநொச்சியில் இருந்தவர்களும் சேர்ந்து மீண்டும் அகதி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரால் கிளிநொச்சி கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து, ஆயிரக்கணக்கான மக்கள் வவுனியா வர முயற்சித்தும் கூட, அச்சமயம் இராணுவம் அதற்கு அனுமதி அளிக்காததால், அம்மக்களால் வவுனியா வரமுடியவில்லை. இருப்பிட வசதியில்லை, மருத்துவம் இல்லை, உணவு வசதி சீராக இல்லை, குடிநீர் வசதி இல்லாத நிலையில், மக்கள் தமது உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ள ஆளுக்கு 8000ரூபாய் கொடுத்து இந்தியாவிற்கு அகதிகளாகச் செல்லவும் முற்பட்டனர். இவர்களில் 15, 20 பேர் வள்ளம் புரண்டதால் கடலில் மரணித்ததையும், இன்னும் நூற்றுக்கணக்கானோர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மன்னார் கொண்டுவரப்பட்டதையும் அறிவோம்.

இவ்வளவிற்கும் பின்பு கடந்த மாதம், விரும்பிய மக்கள் புலிக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து வவுனியா வர, இராணுவம் அனுமதி அளித்துள்ளது. இது மிகவும் வரவேற்கப்படவேண்டிய விடயம். ஆனால் வவுனியாவிற்குள் வரும் மக்கள் எவ்வாறு நடத்தப்படுகின்றனர் என்பதே இங்குள்ள முக்கிய பிரச்சினையாகும். இங்கு வரும் மக்கள் தொடர்பாக அரசாங்கத்திற்கு திட்டவட்டமான முடிவில்லாததால் இம் மக்கள் மாதக்கணக்கில் முகாமில் இருந்து வாடவேண்டியுள்ளது.

இதை எழுதும் சமயத்தில் ஏறத்தாழ 10ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் ஒருவாரகாலத்திற்குள் வவுனியாவிற்கு வந்துள்ளனர். சராசரி நாளாந்தம் 500 பேர் வந்தவண்ணமுள்ளனர். இவர்கள் எல்லோரும் அகதி முகாம்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

பூந்தோட்டம் கல்வியியல் கல்லூரி, சைவப்பிரகாச வித்தியாசாலை, வேப்பங்குளம், நெலுக்குளம், வெளிக்குளம் பாடசாலைகள், (C.C.T.M.S.) போன்ற சகல பாடசாலைகளும் இம் மக்களால் நிரம்பி வழிகின்றது. தொடர்ந்தும் ஏனைய பாடசாலைகள் மூடப்பட்டு அகதி முகாம்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இம் மக்கள் தொடர்பான சில முக்கிய விடயங்களை அரசின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றோம். முதலாவது, இவர்கள் இலங்கைப் பிரசைகள், இவர்கள் இலங்கையில் எங்கு வாழவும் உரித்துடையவர்கள் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இரண்டாவது, அம்மக்கள் எங்கு குடிமிருக்கப் போகின்றார்கள் என்பதை அவர்கள் தான் முடிவு செய்ய வேண்டும். அவர்களை வலுக்கட்டாயமாக அகதி முகாம்களில் வைத்திருப்பதோ அன்றி அவர்களை கட்டாயப்படுத்தி யுத்தம் நடக்கும் பிரதேசங்களுக்கு அனுப்புவதோ, அவர்களது அடிப்படை ஜனநாயக உரிமைகளை மீறும் செயல் என்பதுடன், அது மனித உரிமை மீறலும் கூட.

இப்பொழுது மீண்டும் வவுனியாவிற்கு வந்துள்ள மக்கள் தொடர்பாகப் பார்த்தால், இவர்களை வலுக்கட்டாயமாக அகதிமுகாம்களில் தங்க வைத்துள்ளார்கள். இவர்கள் யாரும் வெளியில் போகமுடியாது. இவர்களில் வயது வந்தவர்களுக்கு 50 ரூபாவும், சிறார்களுக்கு 35ரூபாவும் நாளாந்த உணவுக்காக கொடுக்கப்படுகின்றது. இம் முகாம்களில் சுகாதார வசதி மிகவும் மோசமானது. 1000-2000 அகதிகள் இருக்கும் இடங்களில் ஒரு சில மலசலகூடங்களே இருக்கின்றன.

இவை ஒருபுறமிருக்க, இங்கு வந்துள்ள மக்கள் பல்வேறு தேவைகளுக்காக வந்துள்ளார்கள். பெரும்பான்மையான மக்கள் வடகிழக்கில் சமாதானம் தோன்றும்வரை வவுனியாவில் வசிக்கவும், தமது பிள்ளைகளை அங்கு படிப்பிக்கவும் விரும்புகின்றார்கள். இன்னும் சிலர் வெளிநாடுகளுக்கு தமது உற்றார் உறவினரிடம் போக விரும்புகிறார்கள். வேறு சிலர் மருத்துவ தேவைகட்காக வந்துள்ளார்கள். சிலர் அகதிகளாகவே வந்துள்ளார்கள்.

ஆனால் இவர்கள் எல்லோருமே அகதிகளென முத்திரை குத்தப்பட்டு முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர். சுற்றிவர முட்கம்பி வேலி இட்டு பொலிசாரின் பாதுகாப்பிலேயே இம் முகாம்கள் உள்ளன. உற்றார் உறவினர் இவர்களுடன் பேசுவதென்றால் கூட முட்கம்பியினூடாகத்தான் பேசலாம். இதை நேரடியாகப் பார்க்கும் எவருக்கும் ஹிட்லரின் வதை முகாம்கள்தான் மனத்திரையில் தோன்றும். நிச்சயமாக இது இன்றைய அரசிற்கும் கூட அபகீர்த்தியை ஏற்படுத்தும்.

புலிகளின் ஊடுருவல் இருக்கலாம். ஆகவே இவர்களை விசாரணைக் குட்படுத்த வேண்டும் என்பதில் நியாயம் இருக்கலாம். ஆனால் 6 மாதக் குழந்தை தொடக்கம் கர்ப்பிணிப் பெண்கள், வயோதிபர் வரை ஒரே கண்கொண்டு பார்ப்பது சரியான அணுகுமுறையாக இருக்காது. புலிகளுக்கெதிராக அரசு 'தொடுத்திருக்கும் யுத்தத்தில் முழுத் தமிழ் மக்களுமே பாதிக்கப்படுகின்றனர் என்பதுதான் உண்மை. குறைந்தபட்சம் அப்படிப் பாதிக்கப்படும் மக்களை மேலும் மேலும் துன்பத்துக்குள்ளாக்காமால் அவர்களுக்கு இயன்ற உதவிகளைச் செய்து, அவர்கள் உயிர் வாழவும் கௌரவமாக சீவிக்கவும் சில ஏற்பாடுகளைச் செய்வதே, நியாயமாக நடந்துகொள்ள விரும்பும் அரசின் கடமையாக இருக்க முடியும்.

1. வவுனியாவிற்கு வரும் மக்கள் உடனடியாகவே விசாரிக்கப்பட்டு அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். சிறுவர்கள் கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள், குடும்பமாக உள்ளவர்களை வேறுபடுத்தி, அவர்கள் வவுனியாவிலோ அல்லது வேறு எங்காவது வசிக்க விரும்பினால் அதற்கான அனுமதி கொடுக்கப்பட வேண்டும்.

2. உத்தியோகத்தர்கள், நேர்முகப் பரீட்சைக்கு வருவோர், வெளிநாடு செல்ல விரும்புவோரையும், அவர்களுடைய பத்திரங்களை சோதித்து அவ்வவ் இடங்களுக்குப் போக அனுமதி அளிக்க வேண்டும்.

3. இருக்க இடமின்றி முகாம்களில் இருக்க விரும்புவோர்க்கு பிரத்தியேக முகாமொன்று அமைத்து அவர்களை அங்கே தங்க வைக்கலாம்.

4. விரும்பியோர் யாழ்ப்பாணம் போக அனுமதிப்பதுடன், அவ்வாறு விருப்பமில்லாதவர்களை, ஏதோ ஒரு விதத்தில் அவர்கள் நெருக்கி அனுப்புவதென்ற அணுகுமுறை கைவிடப்பட வேண்டும்.

5. குறிப்பிட்ட சில நாட்களுக்குள் இம் மக்களின் விசாரணைகள் முடிக்கப்பட்டு, அவர்கள் தமது அன்றாட கடமைகளுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும்.

இவற்றைச் செய்வதன்மூலம் அம்மக்களின் கஷ்டங்களைப் போக்கலாம் என்பதுடன், அரசின் மேல் நல்லபிப்பிராயம் ஒன்று தோன்றவும் இது வழிவகுக்கும்.

இன்று, வவுனியாவில் உள்ள சகல பாடசாலைகளும் அகதி முகாமாக்கப்படுவதால், வவுனியா மாணவர்களின் கல்வியே முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பாடசாலைகளில் அடைக்கப்பட்டுள்ள மக்கள் தொடர்பாக விரைவான முடிவுகள் எடுப்பதன்மூலம், வவுனியா மாணவர்கள் தமது கல்வியைத் தொடர வழி பிறக்கும்.

எந்த ஒரு மனிதனும் தான் உயிர்வாழவும் கௌரவமாக வாழவுமே விரும்புவான். தமது சொத்துக்களை இழந்து, சொந்தம் பந்தங்களை இழந்து மிகவும் கஷ்டங்கள் சிரமங்களுக்கு மத்தியில் உயிர் வாழ்வதே நோக்கமாக வந்த மக்களை மீண்டும் யுத்த பூமிக்கு விரட்டாமல், அவர்களை மேலும் துன்புறுத்தாமல் அவர்கள் கௌரவமாக வாழ ஆவன செய்ய வேண்டுமென அரசைக் கோருகிறோம்.



தேசபக்தி என்பது, நம்மவர்களுக்கு அன்னியர்களால் நேரிடும் தீமைகளை மாத்திரம் ஒழிக்கும் இயல்புடையதன்று. நமக்கு நாமே செய்துகொள்ளும் அநீதிகளையும் நீக்கும் இயல்பு கொண்டது.

- பாரதி

### தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதியகண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்ப வேண்டிய முகவரி:

**புதியகண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு**

புதியகண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

29A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-2398

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-22070

மன்னார்
☎ 023-2370

**வெளிநாட்டு முகவரிகள்:**

Post Bag: 1041,
Madras-17,
India.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

P.Box: 6800,
Agincourt,
Ont-MIS3C6,
Canada.

E.P.I.C
Box No: 95,
95144, Garges Les,
Gonnesse Cedex,
France.

P.Fach: 100206,
44002 Dortmund,
Germany.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

www.padippakam.com



இனிய தமிழ் மக்களே!...

இனிய தமிழ் மக்களே!...
இனிய தமிழ் மக்களே!...
இனிய தமிழ் மக்களே!...
இனிய தமிழ் மக்களே!...
இனிய தமிழ் மக்களே!...
இனிய தமிழ் மக்களே!...
இனிய தமிழ் மக்களே!...



# பிரச்சினை தீர்வதற்கான நிர்ப்பந்தங்களை எல்லாத் தரப்பிலிருந்தும் உருவாக்குவோம்

## அன்பார்ந்த தமிழ் மக்களே!

இனப் பிரச்சினைக்கு ஓர் தீர்வு எற்பட்டதோ இல்லையோ, ஆனால் யுத்தத்தை ஓர் முடிவுக்கு கொண்டு வருவது என்பதில் அரசு முனைப்புடன் செயற்படுவதாகவே தோன்றுகின்றது.

கிழக்கு மாகாணத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதும், கிளிநொச்சிக்கும் வவுனியாவிற்குமிடையிலான வீதியை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதுமே இன்று அரசின் முன் உள்ள இரண்டு முக்கிய இராணுவக் குறிக்கோள்களாக உள்ளது.

இவை தமது கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டால் புலிகளை காட்டுக்குள் விரட்டி விடலாம்; அதன் பின்னர் அவர்களது செயற்பாடுகளும் அங்கொன்றும் இங்கொன்றுமாக குறைந்து விடும் என்றும் நம்புகின்றார்கள்.

அதேசமயம் வருடக்கணக்காக யுத்தத்தின் கொடூரங்களால் பாதிக்கப்பட்ட மக்களும், தாம் உயிர்வாழக் கூடிய ஓர் அமைதியான சூழலையே எதிர்பார்த்து நிற்கின்றார்கள். மீண்டும் மீண்டும் அகதிகளாகி, தமது சொத்துப் பத்து, குழந்தை குட்டிகளை இழந்து தவிக்கும் இம் மக்கள் தொடர்ச்சியான ஆயுத நடவடிக்கைகளையும் வெறுக்கின்றார்கள்.

கிளிநொச்சி, இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் போன பின், 14 ஆயிரம் மக்கள் அகதிகளாகி வவுனியா வந்துள்ளார்கள்; ஆயிரக் கணக்கில் இந்தியா போய்க் கொண்டிருக்கின்றார்கள்.

இந்நிலையில் தமது பலங்கள், பலவீனங்களை மதிப்பிட்டு உரிய முறையில் பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபடுவதன் மூலமே இவ்வளவு உயிரிழப்புக்களுக்கும் பரிகாரமான அளவிலாவது ஓர் கௌரவமான தீர்வை நாம் எட்ட முடியும்.

ஆனால், புலிகளைப் பொறுத்த வரையில் யுத்தத்தை தொடர்ந்து நடாத்துவதிலேய அவர்கள் குறியாக இருப்பதாகத் தோன்றுகின்றது.

இன்று வட கிழக்கில் முல்லைத் தீவைத் தவிர்ந்த ஏனைய நகரங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற சகல நகரங்களுமே இராணுவக் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

அரசாங்கம் தன்னாலியன்ற வரை, முழு வட கிழக்குமே தனது கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது என்ற சூழலை உருவாக்கவே விரும்புகின்றது. இதற்காக முப்படையில் உள்ளோர்க்கும் சம்பள உயர்வு மற்றும் பல்வேறு சலுகைகளையும் அறிவித்துள்ளது. அதேசமயம் மேற்கொண்டு 35ஆயிரம் பேரை படைகளில் இணைக்க கிராம ரீதியாக முயற்சித்து வருகின்றது. தனது யுத்த செலவினத்தை 5000 கோடிக்கும் மேலாக அதிகரித்துள்ளது.

அது மாத்திரமல்லாமல், தனது யுத்த நடவடிக்கைகளை நியாயப் படுத்துவதிலும் சர்வதேசஆதரவைப் பெற்றுக்கொள்வதிலும் வெற்றி அடைந்து வருகின்றது.

ஆனால் புலிகளோ யாழ்ப்பாணத்தை இழந்து, கிளிநொச்சியை இழந்து, தமது பிடிமானங்களை இழந்தே வருகின்றார்கள். தங்கள் பிரச்சாரத்துக்கு அவ்வப்பொழுது நடைபெறுகின்ற மனிதக் குண்டுத் தாக்குதல்கள், மறைந்திருந்து தாக்குதல்களைக் குறிப்பிடலாம். எத்தனை இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், எத்தனை பொலிசார் கொல்லப்பட்டனர், எத்தனை ஆயுதங்கள், ரவைகள் கைப்பற்றப்பட்டன என்றும் கூறலாம்.

ஆனால் இவை யாவும் சில சமயங்களில் வெளிநாடுகளில் பணம் திரட்டும் பிரச்சாரத்துக்கு உதவுமே தவிர, இது பாரிய நெருக்கடிகளை அரசுக்கு ஏற்படுத்தாது என்பதை நாம் உணர வேண்டும்.

எந்த நாட்டின் ஆதரவுமற்று, மக்களிடம் இருந்தும் அந்நியப்பட்டே இன்று புலிகள் இருக்கின்றார்கள்.

கிழக்கு மாகாணத்தில் தொலைபேசி, மின்சாரம், போக்குவரத்து போன்றவை சீர்குலைக்கப்படுகின்றன. 'அரசின் சொத்துக்களை அழிப்பதும் விடுதலைப் போராட்டத்தில் ஒருவகை, இதனால் மக்கள் கஷ்டமடையலாம், ஆனால் அவற்றை மக்கள் பெரிதுபடுத்தக் கூடாது' என புலிகள் கூறலாம். ஆனால் இவற்றை அழிப்பதன் மூலம் முழு மக்களின் கல்வி, வேலை, போக்குவரத்து சகலதுமே பாதிக்கப்படுகின்றது. இதனை மக்கள் விரும்பமாட்டார்கள் என்பது இவர்களுக்கு இன்னும் புரியவில்லை.

இந்நிலையில் தம்மைப்பற்றியும் தனிநாட்டைப் பற்றியும் அதீத கற்பனையில் மிதக்காமல் இப்பொழுதே அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய அதிகபட்ச உரிமைகளைப் பெற்றுக்கொள்வதே புத்திசாலித்தனமாகும்.

நாம் விரயமாக்கும் ஒவ்வொரு நாளும், அகதிகள் அதிகரிக்கின்றார்கள், அநாதைகள் அதிகரிக்கின்றார்கள், அநியாயக் கொலைகள் அதிகரிக்கின்றன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக அரசாங்கம், தான் விரும்பிய தீர்வொன்றை தமிழ் மக்கள் மேல் திணிப்பதற்கான வாய்ப்பே அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் புலிகளும், அரசும் ஒத்துக் கொண்டபடி மூன்றாம் தரப்பொன்றினூடாக பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இராணுவ ரீதியில் சில வெற்றிகளைச் சந்தித்துள்ள அரசு, பேச்சுவார்த்தைக்குப் பின்னடிக்கலாம். ஆனால் தமிழ் மக்களின் எதிர்காலத்தைப் பற்றி அக்கறையுள்ளோர், கவலைப்படுவோர், இல்லையேல் அதற்காக யுத்தம் புரிவதாகக் கூறுவோர், பேச்சுவார்த்தை ஒன்று தொடங்குவதற்கான தமது வெளிப்படையான கருத்துக்களை திட்டவட்டமாகத் தெரியப்படுத்த வேண்டும்.

## அன்பார்ந்த தமிழ் மக்களே!

எந்த அரசாங்கம் வந்தாலும் தமிழ் மக்கள் நாயிலும் கேவலமாகவே நடாத்தப்படுகின்றார்கள். கைது, கற்பழிப்பு, கொலை என்பதை இராணுவத்தினரின் அகராதியில் இருந்து அகற்ற முடியாது என்பதையே அவர்கள் எமக்கு உணர்த்தி வருகின்றார்கள்.

அரசு, தனது இராணுவத்தின் புனிதத் தன்மை பற்றி நாளாந்தம் பிரச்சாரம் செய்கின்றது. ஆனால் அவர்களால் நடாத்தப்படும் மனித உரிமை மீறல்களைப் பற்றி, அவர்கள் கண்டு கொள்வதே இல்லை.

யாழ்ப்பாணத்தில் கிருஷாந்தியின் கொலையும், அவரது தாய், தம்பி, அயலவரின் கொலைகளும், நூற்றுக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் விலாசமே இல்லாமல் ஆக்கப்படுவதற்கும் எந்தப் பதிலுமே இல்லை.

புலிகளைப் பொறுத்தவரையில் இது அவர்களுக்கு கிடைத்துள்ள பிரச்சாரத்திற்கான ஆயுதம் மாத்திரமே. ஆனால் மனிதத் தன்மையுடன் நோக்கினால், இவை யாவும் அநாவசியமான அழிவுகளே.

நாளாந்தம் இவ்வாறான எத்தனை கொலைகள் எத்தனை கற்பழிப்புகள் நடைபெறுகின்றன. இவற்றுக்கு எதிராக நாம் அணிதிரளாத வரை கொலைகாரர்கள் இப்படியான நடவடிக்கைகளைத் தொடரவே செய்வார்கள்.

இன்று பாராளுமன்றத்தில் இருக்கக்கூடிய தமிழ் கட்சிகளும் கூட தம்மை வளர்த்துக் கொள்ள, தமது இருப்பை பாதுகாத்துக் கொள்ளவே பேரம் பேசுகின்றனவே தவிர ஓர் தீர்வை நோக்கி மக்களை அணிதிரட்டுவதிலோ, அல்லது அரசு–புலிகளின் யுத்தக் கெடுபிடிகளை நிறுத்துவதற்கோ இவர்களால் எதுவுமே செய்யமுடியாமலேயே உள்ளது.

பாராளுமன்றத்தில் தன்னை பாதுகாத்துக் கொள்ள தமிழ்க் கட்சிகளின் உதவி அரசாங்கத்துக்கு தேவையாக உள்ளது. இதைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய காரியங்களைக் கூட, பாராளுமன்றத் தமிழ்க் கட்சிகள் செய்யாமலிருக்கிறார்கள் என்பதுதான் துரதிர்ஷ்டமானது.

'ஜனநாயகப் பாதைக்கு வந்து விட்டோம்' என்று கூறினாலும் இவர்களாலும் கூட இன்றும் ஆயுதங்களைக் கைவிட முடியவில்லை. ஆயுதங்கள் இல்லாவிட்டால் புலிகள் கொலை செய்து விடுவார்கள் என்கிறார்கள். அதில் உண்மை இருக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இவர்களுக்கு சரியான பாதுகாப்பை அளிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் அவர்கள் அதனையும் செய்வதில்லை.

வவுனியாவில் 14000இற்கு அதிகமானோர் அகதி முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளார்கள். 'நாம் அகதியில்லை எம்மை உழைத்து வாழ விடுங்கள்' என அவர்கள் கேட்கின்றார்கள். இவர்களை வெளியில் எடுத்துவிடக் கூட இன்றைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் முடியவில்லை.

ஏனெனில் இவர்கள் எல்லோருக்கும் சொந்தமான தனித்துவமான Agenda உண்டு. இவை நிறைவேற்றப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டுமாயின், ஓர் எல்லைக்கு மேல் இவர்கள் பேச முடியாது. நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராட முடியாது. அப்படிப் போராடினால் அரசில் உள்ளோர் கவலைப்படுவார்களா கோபப்படுவார்களா என்ற பயம்.

இந்நிலையில் யுத்த நிறுத்தத்துக்காக தீர்விற்காக மனித விரோத செயல்களுக்கெதிராக மக்கள்தான் வீதியில் இறங்கியாக வேண்டும்.

ஈ.பி.ஆர்.எல்.எப். ஐப் பொறுத்த வரை மேற்கண்ட கோரிக்கைகளுக்காகப் போராடத் தயாராக உள்ளது. பிரேமதாசா அரசிலும் விஜேதுங்கா அரசிலும் நாம் இருந்தபொழுது இவற்றைக் கண்டித்தே வந்துள்ளோம். அரசை எதிர்த்தோம் என்ற காரணத்திற்காக எமது தோழர்கள் இராணுவத்தால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள், மிரட்டப்பட்டார்கள். ஆனால் எமது எதிர்ப்பை நாம் என்றும் கைவிடவில்லை.

இன்றும்கூட சந்திரிகா அரசு ஓர் நியாயமான தீர்வுக்கு வருவார் என்பதால் அவரை நாம் ஜனாதிபதித் தேர்தலின்போது ஆதரித்தோம். இதற்காக இவ்வரசு செய்யும் மனித விரோதச் செயல்களை எல்லாம் வேடிக்கை பார்க்க வேண்டுமென்பதல்ல. அனைத்து மக்களும் இணைந்து இவற்றை கண்டிக்க வேண்டும்; மக்களனைவரும் இணைந்து தொடர்ச்சியாகப் போராட வேண்டும். இல்லையேல் அரசு எமக்கு மேல் ஏறி சவாரி விடவே செய்யும்.

யுத்த நிறுத்தத்துக்காக, கௌரவமான தீர்வுக்காக, மனித உரிமைகளுக்காக ஜனநாயக ரீதியில் போராடுவது தேசவிரோத செயல் அல்ல. ஈ.பி.ஆர்.எல்.எப்., இப் போராட்டங்களை முன்னெடுக்க, முழு மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் எதிர்பார்த்து நிற்கின்றது.

மக்கள் சக்தி என்ன என்பதை இவர்களுக்கு புரிய வைப்பதன் மூலமே, இவர்களை பிரச்சினையைத் தீர்த்துவைக்கத் தூண்டலாம். இல்லாதவரை இன்னும் பல வருடங்கள் யுத்த சகதிக்குள் வாழ நாம் நிர்ப்பந்திக்கப்படுவோம்.

ஆரம்பத்தில் அகிம்சை முறையில் போராடியபோது புரிந்து கொள்ளாதவர்கள்.... பின்னர் ஆயுதப் போராட்டமாக வெடித்தபோதும் பிரச்சினையைப் புரிந்து கொள்ளாதவர்கள்.... மீண்டும் ஜனநாயகப் போராட்டத்துக்கு பணிவார்களா என நீங்கள் கேட்கலாம். மனித உரிமைகளை முக்கியத்துவப்படுத்தும் இன்றைய உலகில், அவற்றுக்கான எமது போராட்டங்களை இலங்கை அரசோ புலிகளோ கேட்காவிட்டாலும் கூட, முழு உலகமும் எமது போராட்டங்களை ஆதரிக்கும்.

எமது மக்கள் போராட்டங்களூடாக எமது நீதியான நியாயமான கோரிக்கைகளை முழு உலகமும் சிங்கள மக்களும் ஏற்கச் செய்வோம். வன்முறையால் தமிழ் மக்கள் மாத்திரமல்ல, சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டே வருகின்றார்கள். சிங்கள இளைஞர்களும் யுவதிகளும் கூட யுத்த களத்தில் கொல்லப்பட்டே வருகின்றார்கள். எனவே சமாதானப் பேச்சுவார்த்தையூடாக இதனைத் தீர்க்க நாம் இடித்துரைப்போம்.

அரசின் வன்முறையையோ புலிகளின் வன்முறையையோ இந்த உலகம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் கூட, இது உள்நாட்டு விவகாரம் என வாய்மூடி நிற்கின்றார்கள். எனவே மனித உரிமைகளைப் பற்றி பேசுவோரை இதில் தலையிட வைப்போம். எமது பிரதேசத்தை, எமது சந்ததியை, எமது கௌரவத்தை, எமது சுதந்திரத்தை பாதுகாப்பது எமது கையிலேயே உள்ளது.

இதனை நாம் உணர்வோமாயின், நிச்சயமாக சர்வதேச சமூகம் எமக்கு ஆதரவாக இருக்கும். இப் பிரச்சினை தீர்வதற்கான நிர்ப்பந்தங்கள் அதனூடு உருவாகும்.

எனவே இன்னும் நேரம் வரும் காலம் வரும் என்று காத்திராமல் எமது கோரிக்கைகளின் நியாயங்களை உலகத்துக்கு தெளிவுபடுத்துவோம். அதற்காக ஒன்றிணைவோம் அதற்காகப் போராடுவோம்.

அன்புடன்,
சுரேஷ்



இங்கும் அங்குமாக இந்த அகதிப் பயணம் என்று நிற்கும்?

படிப்பகம்

www.padippakam.com



# வவுனியா அகதிகள்....

(முன் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா ஈரப்பெரியகுளம் முகாமினுள்ளேயே ஒரு பெண், குழந்தை பெற்றார். வேப்பங்குளம் அகதிமுகாமில் முத்துலிங்கம் சஜித்திரா (10) என்ற சிறுமி வயிற்றோட்டம் காய்ச்சல் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டு 3 நாட்களில் மரணமடைந்தார். வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் பூந்தோட்ட மயானத்தில் பிணம் புதைக்கப்பட்டது.

தவிர, 55 வயதான தம்பிராசா, இவரும் வேப்பங்குளம் முகாமில் மரணமடைந்தார். இவருடைய மனைவியார் இறுதிச் சடங்கு மேற்கொள்வதற்காக அரசின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ள பகுதிக்குச் சென்றுவிட்டார்.

ஆட்களின் தொகை முகாம்களில் அதிகரிக்க அதிகரிக்க மலசலகூடம் நிரம்பி வழிகிறது. சராசரியாக 1000பேர் வாழும் முகாம்களில் 2,3 மலசலகூடங்கள் எதற்குப் போதும்?

முகாம்களில் பகலில் இலையான்களும் இரவில் நுளம்புகளும் ஆட்சி செய்கின்றன.

வவுனியா சிரேஷ்ட வைத்திய அதிகாரி திருமதி யோகநாதன் வேப்பங்குளம் முகாமின் சுகாதார நிலைபற்றி வர்ணிக்கையில் இப்படி வர்ணித்தார்:

முகாமில் சிற்றுண்டிச்சாலை நடத்துபவர்கள் வெளி கொண்ட இடங்களில் சமைக்கும்போது இலையான்களும் மயிர்க் கொட்டிகளும் கூட அவிந்து விடுகின்றன என்று குறிப்பிட்டார்.

சில முகாம்களில் ஒருவர் உணவுட்கொள்ளும்போது மற்றவர்கள் இலையான்களை விசிறித் துரத்த வேண்டும்.

50இற்கு மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் இந்தப் 11 முகாம்களிலும் இருக்கிறார்கள். வயோதிபர்கள், குழந்தைகள், கல்வி என்ற வாய்ப்பை இழந்த இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பல தரப்பட்டோர் இந்த முகாம்களில் தவம் கிடக்கிறார்கள்.

மரணத்தைத் தவிர வாழ்க்கையில் எதுவுமே இல்லை என்றளவிற்கு வாழ்க்கையின் விளிம்பில் இவர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

சட்டத்தின் பாதுகாவலர்களோ பயங்கரமான கிரிமினல் குற்றவாளிகளின் மீது விழிப்பாயிருப்பதுபோல் இந்த ஏழைத் தமிழர்கள்மீது விழிப்புடன் இருக்கிறார்கள்.


நம்பிக்கையுடன் ஆரம்பத்தில் 500-1000 வரை உள்ளே மக்கள் வந்து கொண்டிருந்தனர். தற்போது 150 க்கு உட்பட்ட தொகையினர் தான் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்குள் வருகிறார்கள்.

புலிகளும் தங்கள் பங்கிற்கு, 'நீங்கள் வவுனியாவிற்குள் சென்றால் அடைத்து வைக்கப்படுவீர்கள், 'சொப்பிங்' பைகளில்தான் மலம் கழிக்க வேண்டி வரும்' என்று சொல்லி, வருபவர்களையும் திருப்பி அனுப்புகிறார்கள்.

முகாம்களில் மாதக்கணக்கில் அடைபட்டிருந்தவர்கள் பலர் சலிப்புற்று திருப்பவும் அரசின் கட்டுப்பட்டிலில்லாத பகுதிகளுக்குள் திரும்பிச் செல்கிறார்கள்.

தற்போது முகாம்களில் வாழ்பவர்கள் பலதரப்பட்டோர்:

❀ தமது பிள்ளைகளின் எதிர்காலம், கல்வி பற்றி கவலையுடன் வந்தவர்கள்.



❀ உறவினர்கள் நண்பர்களுடன் சேர்ந்து வாழ வந்தவர்கள்.

❀ வேலை நிமித்தம் வந்தவர்கள்.

❀ கடும் நோய்களுக்குச் சிகிச்சைக்காக வந்தவர்கள்.

❀ எங்காவது யுத்தமில்லாத இடத்திற்குச் சென்றுவிட வந்தவர்கள்.

❀ வெளிநாட்டிலுள்ள பிள்ளைகளிடம், உறவினர்களிடம் உதவி பெற வந்தவர்கள்.

❀ வேலை ஏதாவது தேடிக் கொள்ளலாம் என வந்தவர்கள்.

❀ திருமணம், மரணச் சடங்குகளுக்காக வந்தவர்கள்.

❀ அகதி முகாம்களில் (தடுப்பு முகாம்களில் அல்ல) தஞ்சமடைய வந்தவர்கள்.

இப்படிப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

முக்கியமாக யுத்தத்தினுள் தமது பிள்ளைகள் அகப்பட்டு விடாமல் காப்பாற்றிக் கொள்வதற்காக பிள்ளைகளைக் கொண்டு வந்தவர்கள் எல்லோருக்கும் ஏமாற்றம்.

வடக்கின் புனர்வாழ்வு புனரமைப்பிற்குப் பொறுப்பான சோமபால குணதீர அவர்களோ, எல்லோரையும் தங்கவைப்பதற்கென பாடசாலை வளவுகளினுள்ளும் வெளியிலும் 100 கட்டிடங்களைக் கட்டுமாறு வவுனியா செயலகத்தில் கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

மார்கழி மாதம் பாடசாலைகள் ஆரம்பிக்க வேண்டும். இன்று வட மாகாணம் முழுவதுமே கல்வி பாழடிக்கப்பட்டுள்ளது. அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியிலும் சரி, கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளிலும் சரி, பாடசாலைகள் அகதிகளால் நிரம்பி வழிகிறது. கற்பதற்கான அடிப்படை வசதிகள் எதுவும் அரசின் கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளில் இல்லை. கற்பதற்கான மனநிலை கூட இல்லை.

யாழ்ப்பாணத்தில் நடந்த கிருஷாந்தி, ராஜினி கற்பழிப்புச் சம்பவங்கள் இராணுவத்தினரின் சேட்டைகள் எல்லாம், பாடசாலை செல்வதையே அச்சமூட்டும் விடயமாக மாற்றி உள்ளது.

45 ஆயிரம் இராணுவத்தினர் இருக்கும் சூழ்நிலையில் ஒன்றிரண்டு இத்தகைய சம்பவங்கள் நடக்கத்தான் செய்யும் என்று அரசு சமாதானம் கூறலாம். ஆனால் இத்தகைய சம்பவங்கள் அங்கு பரவலாக நடைபெறுகின்றன.

மாணவர்கள் சாத்தியமான வழிகளில் எல்லாம் எதிர்ப்பைத் தெரிவிக்கிறார்கள். சுண்டிக்குளி பெண்கள் பாடசாலை மாணவிகள் தமது சக மாணவி ஒருத்திக்கு நேர்ந்த இந்தக் கொடூர சம்பவத்திற்காக ஒருநாள் அடையாள உண்ணாவிரதமிருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் அனைத்துப் பாடசாலை மாணவ மாணவிகளும் இருவார பாடசாலை பகிஸ்கரிப்பில் ஈடுபட்டுள்ளார்கள்.

ஒரு பெருமைமிகு கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட சமுதாயத்தின் கல்வித்துறையிலான அழிவென்பதை எந்த புலனுணர்வுள்ள மனிதனும் சகித்துக் கொண்டிருக்க முடியாது.


எனவே, சாத்தியமான வழிகளிலெல்லாம் நாம் இவற்றுக்கெதிராக போராட வேண்டும். இவற்றை வெளி உலகிற்குப் பகிரங்கப்படுத்த வேண்டும். சாத்தியமான அளவில் தமிழ், சிங்கள, ஆங்கில தகவல் தொடர்புச் சாதனங்களில் வெளிவருவதற்கு வழிவகுக்க வேண்டும்.

அத்தோடு யுத்த முனைப்புக்கள் முதன்மைப்படுகையில் இத்தகைய நிலவரமே அதிகரித்துச் செல்லும். இதற்கு மேலும் தாங்க முடியாது என்றளவிற்கு எமது சமுதாயம் தியாகம் புரிந்திருக்கிறது. இப்போது வாழ்வா சாவா என்ற எல்லையில் நின்று கொண்டிருக்கிறது.

தற்போதைய நிலையில் மூன்றாவது சக்தியொன்றின் தலையீட்டுடன் ஒரு கௌரவமான அரசியல் தீர்வைக் காண்பதற்கு ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள் நலனில் அக்கறையுள்ள அனைத்து சக்திகளும் ஒன்றிணைந்து முயல வேண்டும். ●

## பள்ளித் தலமனைத்தும் அகதிகள் வைப்போம்









படிப்பகம்

www.padippakam.com








## மாண்புமிகு ஜனாதிபதி அவர்கட்கு,

தாங்கள் பதவிக்கு வரும்பொழுது, முழு இலங்கையிலும் துப்பாக்கி கலாச்சாரத்துக்கும், கொலைக் கலாச்சாரத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்து, இந்நாட்டில் ஜனநாயகமும், மனித உரிமைகளும் மீளவும் காப்பாற்றப்படும் என உத்தரவாதமளித்தீர்கள். இலங்கையில் தென்பகுதியில் அவற்றை நீங்கள் உருவாக்கியுள்ளீர்கள் என்பதில் நாம் பெருமைப்படுகின்றோம், வரவேற்கின்றோம்.

ஆனால் வட கிழக்கில்...?

ஜனநாயகமும் இல்லை, மனித உரிமைகள் மதிக்கப்படுவதுமில்லை என்பதுதான் இன்றைய நிலையாக உள்ளது.

'நீங்கள் விரும்பாத ஓர் யுத்தத்தை புலிகள் உங்கள் மேல் திணித்ததால், இப்பிரச்சினைகள்' என காரணம் கூறி தப்பிக் கொள்ள மாட்டீர்கள் என நம்புகின்றேன்.

புலிகளைப் பொறுத்தவரையில், இனப்பிரச்சினை தீர்வுக்கு அவர்கள் ஆயுதங்களின் மீதுதான் நம்பிக்கை கொண்டுள்ளார்கள் என்பது உண்மைதான். ஆனால் புலிகளை காரணம் காட்டி அப்பாவி மக்களை அழிப்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள் என நம்புகின்றேன்.

யுத்தப் பிரதேசமொன்றில் இரு பகுதியினரின் துப்பாக்கிச் சமருக்குள் அகப்படும் மக்கள், கொல்லப்படுவது என்பது வேறு. ஆனால் இளைஞர்கள் திடீர் திடீரென காணாமல் போவதும், பெண்கள் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்படுவதும், காட்டுமிராண்டித்தனமானதும், கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.

பாடசாலைச் சிறுமியை 10–15 பேர் கொண்ட குழுவாக கற்பழிப்பதும், அவளைக் கொலை செய்வதும், அதனை விசாரிக்கச் சென்ற தாய், மகன் கொலை செய்யப்படுவதும் அனுமதிக்கக்கூடிய விடயங்கள் அல்ல.

யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள், யுவதிகள் காணாமல் போவதற்கும், பெண்கள் கற்பழிக்கப்படுவதற்கும், கொலை செய்யப்படுவதற்கும், இராணுவமும் பொலிசாருமே காரணம். புலிச் சந்தேக நபர்கள் என ஐயப்படுமிடத்து அவர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படலாம்.

ஆனால் கைது செய்தவர்களே தமக்கு தெரியாதென்பதும், பின்னர் இவர்களை உருக்குலைந்த சடலங்களாக குழிகளில் இருந்து மீட்பதும் என்ற விடயங்கள் இன்று யாழ்ப்பாணத்தில் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன. இராணுவக் கொண்டாட்டங்களின் போது இனிப்பு பண்டங்கள் கொடுப்பதாலும், மரதன் ஓட்டங்கள் வைப்பதாலும் மக்களின் மனங்களை வென்றுவிட முடியாது.

மாறாக மக்களை இம்சிக்காமல், துன்புறுத்தாமல் இருந்தாலே மக்கள் இராணுவத்துக்கு உதவியாக இருப்பார்கள்.

ஜனாதிபதி அவர்களே!

யாழ்ப்பாணத்தில் 30000இற்கு மேற்பட்ட மக்கள் கொழும்பு வர பதிவு செய்துள்ளார்கள், இதுவரை கொழும்பு வந்தவர்களில் 90சதவீதமானவர்கள் திரும்பிப் போகவில்லையென புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. ஏன் இந்த நிலைமை என்பதை சற்றாவது சிந்தித்துப் பார்த்தோமா? கொலைகளும் கற்பழிப்புகளும் தொடர்கதையானால் யாரால்தான் அங்கு வாழ முடியும்? யார்தான் அங்கு போக விரும்புவார்கள்.

உங்களது அரசில், தமிழ் மக்களின் இன்னல்கள் தீர்க்கப்படுமென நாம் எல்லோரும் எதிர்பார்த்தோம். உங்களது அரசில், நீதி நியாயம் கிடைக்குமென எதிர்பார்த்தோம்.

ஆனால் எமது எதிர்பார்ப்புகள் யாவும் பொய்த்துப் போவதையே இன்று கண்கூடாகப் பார்க்கின்றோம்.

இந்த வருட ஆரம்பத்தில் பொல்கொட வாவியிலும், ஏனைய சில இடங்களிலும் ஏறத்தாழ 14 சடலங்கள் மிதந்தன. பின்னர் இவை யாவும் தமிழரின் சடலங்களென இனங்காணப்பட்டன. இது தொடர்பாக சில எஸ்.ரி.எப். உத்தியோகத்தர்களும் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் பின்னர் நடந்ததென்ன? அவர்கள் எல்லோருமே விடுவிக்கப்பட்டனர்.

இதனைப் போன்றே சுண் டிக்குளி மாணவி கிருஷாந்தியினதும் அவரது தாய் சகோதரன் அயலவர் ஆகியோரது கொலையிலும் சம்பந்தப்பட்ட 11 பேர் கைது செய்யப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன. ஆனால் இவர்கள் விரைவாக விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்களா? அல்லது இவர்களும் விடுவிக்கப்படுவார்களா என்ற சந்தேகம் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றி உள்ளது.

எனவே இச் சந்தேகங்களை அகற்ற வேண்டுமாயின், நீதி நிலை நிறுத்தப்பட வேண்டுமாயின், இவர்கள் சரியான சட்டங்களின் கீழ் விசாரிக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும். இதன் மூலமே ஏனைய இராணுவத்தினரையும் கட்டுப்பாட்டுடன் நடாத்த முடியும். ஜனநாயகம் என்பது சிங்கள மக்களுக்கு மாத்திரமல்ல. நாமும் அதற்காக ஏங்குகின்றோம். ஒருபுறம் புலிகளால் துன்புறுத்தல்கள் என்றால், மறுபுறம் முப்படைகளாலும் துன்புறுத்தப்படுகின்றோம். புலிகளுக்கெதிராகவே நீங்கள் போராடுவதாகக் கூறினாலும், முழு தமிழ் மக்களையும் நீங்கள் புலிகளாகக் கருதியே செயற்படுகின்றீர்கள் என நாம் ஐயுற வேண்டியுள்ளது.

தென்பகுதியில் வசிக்கும் அல்லது இங்கு வரும் தமிழர்களில் கைது செய்யப்படாதவர்கள் எவரும் இல்லை. இடதுசாரிக் கட்சியில் 40–50 வருடங்கள் இருந்து இன்று உங்கள் ஆட்சிக்கு ஆதரவாக இருப்பவர்களே கைது செய்யப்படுகின்றார்கள். உயிரைக் காப்பாற்ற வவுனியா வரும் அனைவரும் அகதிகளாக முகாம்களில் அடைக்கப்படுகின்றார்கள். வயோதிபர், குழந்தைகள், கர்ப்பிணிகள் வவுனியா வந்தபின் வைத்திய வசதி இல்லாமல் முகாம்களில் இறக்கும் துக்ககரமான நிகழ்வுகளை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

யாழ்ப்பாணத்தில் 30,000 மக்கள் தென்பகுதி வர விரும்புகின்றார்கள் என்றால் அங்கிருக்கக்கூடிய மோசமான நிலையே அதற்கு காரணம். இவற்றை உங்களால் நிவர்த்தி செய்ய முடியாதா?

தென்பகுதியில் கொலைக் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தீர்கள். வடகிழக்கில் மாத்திரம் இவை ஏன் தொடரவேண்டும்? புலிகள் என்ற ஐயத்தில் கைது செய்யப்பட்டால், அது தொடர்பாக பெற்றோருக்கு ஏன் அறிவிக்க முடியாது? அப்படிக் கைதாவோர் காணாமலே போய்விடுகின்றார்களே. இது ஜனநாயகமானதா? இல்லையேல் தமிழ் மக்களக்கு மனித உரிமைகளோ ஜனநாயகமோ தேவை இல்லை என நீங்கள் எண்ணுகிறீர்களா?

பொலிசாரும் இராணுவமும் பட்டப் பகலில் பலபேருக்கு முன்னால் கைது செய்வோரை பின்னர் காணவில்லை எனும்போது இவர்கள் எங்கு போய் முறையிடுவது?

ஜனாதிபதி அவர்களே!

யுத்த சகதி ஒன்றுக்குள் நீங்கள் மூழ்கியுள்ளீர்கள்.அதற்குள்ளிருந்து வெளிவர துணிச்சல் தேவை.

இலங்கை இனப்பிரச்சினை ஒன்றும் தீர்க்க முடியாத பிரச்சினையல்ல. ஒன்றுபட்ட இலங்கைக்குள் இதனை தீர்க்க முடியும். நிச்சயமாக யுத்தத்தின் மூலம் நீங்கள் சமாதானத்தை எட்ட முடியாது. சமாதான வழிமுறைகள் மூலமே யுத்தத்தை நிறுத்த முடியும்.

சமாதானத் தீர்வொன்றைக் காண்பதில் உங்களுக்கு உதவ பல நாடுகள் தயாராக உள்ளன. நீங்கள் ஏன் அவர்களின் உதவியை நாடக் கூடாது? சமாதானத்திற்காக வெளிநாட்டு உதவிகளை எடுப்பது ஒன்றும் கௌரவக் குறைச்சலான விடயமல்லவே.

யுத்தத்தை நிறுத்த, இந்த நாட்டை அழிவில் இருந்து காப்பாற்ற, முழு நாட்டு மக்களையும் காப்பாற்ற, சமாதானப் பேச்சுவார்த்தைகளே ஒரே ஒரு வழி. யுத்தம் மூலம் சமாதானம் என்ற உங்கள் அணுகுமுறை சரியானதுமல்ல, நடைமுறைச் சாத்தியமானதுமல்ல. இராணுவத்துக்கு இளைஞர்களைச் சேர்ப்பதிலும், இராணுவத் தளபாடங்களை வாங்குவதிலும் செலவிடும் நேரத்தில் ஒரு பகுதியை சமாதானமாக எப்படி இதனைத் தீர்ப்பது என்பதனை சிந்திப்பதற்கு ஒதுக்கினால் இந்த யுத்தத்தையே நிறுத்தி விட முடியுமே.


ஆயுதமூலம் புலிகளை அழிப்பதென்பதிலும் விட, சமாதானப் பேச்சுவார்த்தை கௌரவமான தீர்வு ஒன்றினூடாக புலிகளை ஜனநாயகப் பாதைக்கு கொண்டுவருவதன் மூலம், மக்களே இவர்களைத் தூக்கியெறிவார்கள். நியாயமான பேச்சுவார்த்தைக்கு புலிகள் இணங்காவிட்டால் சர்வதேச ரீதியாகக் கூட இவர்கள் மீது நிர்ப்பந்தங்களை உருவாக்க முடியும். இவ்வழிகளை விடுத்து, அழிவு தரும் யுத்தத்தின் மூலம் நீங்கள் எவ்வாறு சமாதானத்தை காணப் போகின்றீர்கள்?

கௌரவ ஜனாதிபதிஅவர்களே!

இனவாதிகள் உங்களை நெருக்கலாம். ஆட்பலம் ஆயுதபலம் இருந்தால் யுத்தத்தை வென்றுவிடலாம் என உங்களுக்கு ஆலோசனையும் சொல்லப்படலாம். ஆனால் கௌரவமான தீர்வில்லாமல் இது சாத்தியமானதல்ல. என்றோ ஒருநாள் நீங்கள் பேசத்தான் போகின்றீர்கள். அதனை இன்று செய்யுங்கள்.

இதனால் மேற்கொண்டு நடைபெறஇருக்கும் அழிவுகளை தடை செய்தவர் ஆவீர்கள். தமிழ் மக்களும் உங்களுக்கு நன்றியுடையவராக இருப்பார்கள். ●

யுத்த சகதிக்குள் இருந்து வெளிவர இன்னும் சற்று துணிச்சல் தேவை. யுத்தத்தின் மூலம் நீங்கள் சமாதானத்தை எட்ட முடியாது. சமாதான வழிமுறைகள் மூலமே யுத்தத்தை நிறுத்த முடியும்.




படிப்பகம்

# பாலஸ்தீனியர் எழுச்சி போல ஈழத்திலும் இன்று வேண்டும்

அன்பின் ஆசிரியருக்கு,

புதிய கண்ணோட்டம் வெளியீடு –31ல் வந்த 'யாழ்ப்பாணக் கடிதத்தில் இருந்து...' என்ற விசுவின் கடிதம் பார்த்து யாழ்ப்பாணத் தற்போதைய நிலைமைகளை அறிந்து மிகக் கவலையடைந்தேன். அவ்வப்போது சில விடயங்கள் மேலெழுந்தவாரியாகக் கேள்விப்பட்டாலும், இப்படியான கடிதங்கள் வெளிநாடுகளில் வாழும் எம் போன்றோர்க்கு யாழ்ப்பாணத்தில் நடக்கும் அரச, இராணுவ விடயங்களை படம் பிடித்துக் காட்டுவதோடு மக்களின் மனோ நிலையையும் வெளிப்படுத்துகிறது.

"மற்றவர்களிடமிருந்து மக்கள் மீண்டுள்ள நிலைமையில்"...ஐந்தரை மாதமாகியும் அரசு எந்த நடவடிக்கையும் உருப்படியாகச் செய்யாததாலும், பழையபடி துவங்கிவிட்ட இராணுவ அடாவடித்தனங்களாலும் மக்கள் மீண்டும் மற்றவர்களின் ஆளுமைக்குள் போகக்கூடும் என விசு விளம்புவது நாம் விளங்கக்கூடிய ஒன்றுதான்.




'தமிழ் மக்கள், அரசிடம் சோடாவும் கேட்கவில்லை, பச்சை அரிசியும் கேட்கவில்லை; எம்மை எமது மண்ணில் நிம்மதியாக வாழவிடுங்கள் என்றுதான் கேட்கிறோம்' என்றும், 'இதற்கு தமிழ்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து ஆவன செய்யவேண்டும்' என்றும் கேட்டுள்ளார்.

அவரின் ஆதங்கம் எல்லாத் தமிழர்கட்கும் உள்ள ஆதங்கமாகும். ஆனாலும், அதுதான் ஒரே வழியா?

கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்தோமானால், 1947இல் இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் இன்றுவரை மாறி மாறி வந்த சிறிலங்கா அரசுகள் பலவிதத்திலும் தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்து அடக்கி ஆண்டே வந்துள்ளன. ஜனநாயகம் என்ற போர்வையில், தொடர்ந்து பெரும்பான்மைச் சிங்கள இனம் ஆளும் இனமாகவும், நாம் ஆளப்படும் இனமாகவும் ஆக்கப்பட்டோம்.

ஜனநாயக முறையில் எமது மூத்த தலைவர்கள் சில சத்தியாக்கிரகப் போராட்டங்களை நடாத்தினாலும், எதுவும் பலன் கொடுக்கவில்லை.

இந்த நிலையில்தான் 1970களில் ஆயுதப் போராட்ட நிலைமை ஆரம்பமானது. இதை சிலர், திட்டமிட்டு குறுகியகாலப் போரை நடத்தி ஓர் நல்ல தீர்வைப் பெற முயன்றனர். ஆனால் வேறுசிலர் பயங்கரவாதமே போராட்டம் என முடிவெடுத்து, கொலைகளும் கொள்ளைகளும்தான் போராட்டம் எனக் காட்ட வெளிக்கிட்டு, இன்று யாழ்ப்பாணம் கிளிநொச்சி யாவையும் இழந்து காடுகளில் முடங்கியுள்ளனர்.

அடுத்தசிலர், ஜனநாயகம் என்ற போர்வையுள் நின்றுகொண்டு, இராணுவத்துடன் இணைந்து வடகிழக்கில், விசு கூறிய விடயங்கட்கு துணைபோய்க் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலைமையில் தமிழ் கட்சிகள் ஒன்று சேர்ந்து அரசுக்கெதிராக தமிழ் மக்களின் விடிவுக்காக காந்திய வழியில் போராட முடியுமா?

இந்த இடத்தில் நான், விசு போன்ற நண்பர்கட்கும், வடகிழக்கு வாழ் மூத்த தலைவர்கட்கும், படித்த இளந்தலைமுறைக்கும் கூறக்கூடிய ஓர் உதாரணம் பாலஸ்தீனியர்களின் எழுச்சி (Intifada). இவை எழுதினால் பெரிய புத்தகமே எழுதலாம். ஆனாலும் சுருக்கமாக சில வரிகள் அவர்களது எழுச்சி பற்றிக் கூறி, அதை எமது உள்ளூர் தலைவர்களும் பின்பற்றலாம் என்ற ஆதங்கத்தில் தொடர்கிறேன்.

வட கிழக்கு தமிழ் மக்களின் நிலைமைகளும் பாலஸ்தீனர்களின் நிலைமைகளும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியானவை. பாலஸ்தீனர்களின் தலைமை (PLO) ஆரம்பத்திலிருந்தே வெளிநாடுகளில்தான் இருந்தது. பாலஸ்தீனர்களின் இடங்கள் இஸ்ரேலியர்களின் ஆளுமைக்குள் 1967ல் இருந்து இருக்கின்றது. 1967இல் இருந்து 1987வரை பாலஸ்தீனியர் தமது சொந்த மண்ணில் அகதிகளாகவும், இஸ்ரேலியரின் ஆளுமைக்குள்ளும் இருந்ததோடு, வெளியே உள்ள PLO தலைமை தமக்கு விடிவைக் கொண்டுவரும் என காத்திருந்தனர். PLO வும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இஸ்ரேலுக்கெதிராக சில பயங்கரவாதச் சம்பவங்களைச் செய்து கொண்டிருந்தது.

இக்காலகட்டத்தில் லெபனானில் PLO தமது தலைமையகத்தை வைத்து, தம் நடவடிக்கைகளைக் கவனித்தது. இவர்களின் பயங்கர நடவடிக்கைக்கு 1987இல் இஸ்ரேல் PLO யுத்தம் ஓர் முடிவைக் கொண்டுவந்தது. அதாவது 79 நாள் யுத்தத்தில் PLO பல இழப்புக்களோடு லெபனானை விட்டு ரியுனிசியா போக முடிவெடுத்தது. இதன்பின் PLO இராணுவ நடவடிக்கைகள் குறைந்தது.

இதன் வெளிப்பாடுதான் 1987 இல் ஆரம்பமான பாலஸ்தீனியர் எழுச்சி (Intifada). இதை PLO வின் ஆதரவோடு உள்ளூர் தலைவர்களே முன்னெடுத்தனர்.

பாலஸ்தினியரின் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து மற்றும் முக்கிய தேவைகள் பாதிக்கப்படும்போது, தமது பிள்ளைகள் உற்றார் உறவினர் இஸ்ரேலிய இராணுவத்தால் கைது செய்யப்படும்போது, உள்ளூர் பாலஸ்தீனியர்கள் பலவிதமான போராட்டங்களையும் (ஆயுதமற்ற) நடாத்தினார்கள். இதற்கு இஸ்ரேலியரின் பதில் துப்பாக்கி குண்டுகளாகவே இருந்தது.

ஆனால் பாலஸ்தீனிய மக்கள் அந்த காட்டாட்சிக்கெதிராக ஆயுதமற்ற போராட்டத்தை தொடர்ந்து நடாத்தினார்கள். இழப்பைக் கண்டு அவர்கள் அஞ்சவில்லை. உலக நாடுகள் தினமும் இதை பார்த்துக் கொண்டிருந்தன.

பாலஸ்தீனியர்களும், தமது 'நாடு முழுவதையும் பிடிப்போம்' என்ற பழைய வாதத்தை விட்டு. பாலஸ்தீனியர் வாழும் பிரதேசமான காஸா(Gaza), மேற்குக்கரை(West Bank) ஆகிய பகுதிகளை தமது ஆட்சிக்குள் கொண்டுவர முடிவு செய்ததோடு, இஸ்ரேலியரின் பகுதி அவர்கட்கே உரியது என்பதை தாம் ஆதரிப்பதாகவும் கூறினர்.

அதன் பின் இஸ்ரேலிய–பாலஸ்தீனிய பேச்சுவார்த்தை மூன்றாவது நாட்டு உதவியோடு ஆரம்பமானது. (இதில் அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் முக்கிய பங்கெடுத்தன).

அதன் முடிவு, கூடுதலான பாலஸ்தீனியர் வாழும் பகுதி அவர்களின் ஆட்சிக்குள் வந்துள்ளது.

வட கிழக்கு வாழ் தமிழ் மக்களோ, இதுவரை கூட்டணியை நம்பி, பின் இயக்கங்களை நம்பி, கடைசியில் புலிகளை நம்பி, இன்று எல்லாம் இழந்த நிலையில் கொழும்பில் உள்ள தமிழ் கட்சிகளின் ஒற்றுமையைக் கோரி ஏதாவது செய்யும்படி கேட்டு நிற்கிறார்கள்.

கூட்டணியினர் 77 தேர்தலின் முன்னும் பின்னும் கதைத்தவை நாம் அறியாததல்ல. பின் மறைமுகமாக புலிகளின் ஆதரவாளர்களாக இருந்ததோடு, கடைசியில் தலைவர்கள் புலிகளினாலேயே கொல்லப்பட்டனர்.

இந்திய–இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த கூட்டணி, ஈரோஸ் போன்றோர் ஒத்துழைக்காதது, இவர்கள் தமிழ் மக்களுக்கு செய்த பெரும் துரோகமாகவே நான் கருதுகிறேன்.




புலிகளும், மற்றும் சில அமைப்புக்களும் இந்தியாவுக்கெதிராக செயற்பட்டனர். முடிவில் ஈ.பி.ஆர்.எல்.எப்., பெரும் அழிவோடு அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முயன்றனர். ஆனால் புலிகளோ ஐ.தே.கட்சியோடு (பிரேமதாசா) இணைந்து அந்த ஆட்சியை அழித்தனர். ராஜீவை மனிதக் குண்டு மூலம் கொன்றனர். ஈ.பி.ஆர். எல். எப். தலைவர்களை சென்னையில் கொடூரமாக சுட்டுக் கொன்றனர்.

முடிவில், புலிகள்–பிரேமதாசா தேன்நிலவுக் காலம் யுத்தகாலமாக மாறியது. அதன் தொடர்ச்சியும் அழிவும் நீங்கள் அறியாததல்ல.

இன்று, வடமாகாணம் முழுக்க மக்களை அகதிகளாக்கி அடிமைகளாக்கி அனாதைகளாக்கி அவர்களது சொத்துக்களை சூறையாடிய புலிகள் மீண்டும் வனவாசம் போய் உள்ளனர்.

இந்த நிலைமையில், தமிழ் மக்களுக்கு உள்ள ஒரே வழி பாலஸ்தீனியர் போன்று போராட்டத்தை தங்கள் கையில் எடுப்பதுதான்.

பத்திரிகைத் தணிக்கை, வெளிநாட்டு உதவுவோர் (NGO's) இல்லாத நிலையில் இராணுவ கெடுபிடி கூட இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களின் ஆயுதமற்ற போராட்டம் வடகிழக்கில் ஆரம்பமானால் உலக நாடுகள் எமது பக்கம் கண்திறக்கும் என்பது நிச்சயம்.

இதை புலிகள் தமக்கு சாதகமாகப் பாவிப்பார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் ஓர் பேச்சுவார்த்தையில், (இந்திய உதவியுடனான அல்லது கூட்டு நாடுகளின் உதவியுடனான) புலிகள் ஜனநாயகப் பாதைக்கு தள்ளப்பட்டால் மக்கள் அவர்களை அடையாளம் காணாமல் இருக்கமுடியாது.

தற்போது புலிகள் துவக்குகளோடு, தாம்தான் தமிழரின் தலைவிதியை நிர்ணயிப்பவர்கள் எனக் கூறி, இன்று தமிழர்களை சிறிலங்கா இராணுவத்தின்கீழ் அனுப்பிவிட்டு, ஆங்காங்கே தமிழர்கட்கு 'நெத்தியில் பொட்டு' வைத்துக் கொண்டு திரிகின்றனர். இவர்களால் எதுவும் நடக்கப் போவதில்லை அழிவைத் தவிர.

> தமிழ் மக்களுக்கு உள்ள ஒரே வழி பாலஸ்தீனியர் போன்று போராட்டத்தை தங்கள் கையில் எடுப்பதுதான்.

யாழ்ப்பாணத்தில் தற்சமயம் புலிகள் இல்லை. யாழ்ப்பாணம் அரசின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. எனவே, அங்கு ஓர் ஜனநாயக தேர்தலை வைத்து, அங்குள்ள குறைகளை ஓரளவாவது நிவர்த்தி செய்யக்கூடிய தலைவர்களைத் தெரிவுசெய்யும் உரிமையை அந்த மக்களுக்குத் தருமாறு அரசை நிர்ப்பந்திக்க வேண்டும்.

அன்புடன்,
தேவதாஸ், லண்டன்.
2.11.96.

## தலையையும் வெட்டி, தலையை எடுக்க குடத்தையும் உடைத்து....

பத்திரிகைகள் கிடைத்தன. சற்று தாமதமாகிவிட்டது. பத்திரிகையை வாசிக்கும்போது அவாவாக இருக்கிறது. உண்மையில் வாசகர் கடிதம் ஒரு பெரிய களத்தை ஏற்படுத்தியிருக்கிறது. நாட்டில் மக்களுக்கு உண்மையில் என்ன நடக்கிறது என்பதை அரசோ புலிகளோ வெளிக்கொண்டு வரவில்லை. இந்த நிலையில் பத்திரிகைகளுக்கு ஒரு மகத்தான பொறுப்பு உண்டு. அதை இன்று புதிய கண்ணோட்டத்தைத் தவிர வேறு எதுவும் செய்யவில்லை.

வெளிநாடுகளில் உள்ள தமிழர்களின் செய்தி நிறுவனங்கள், பத்திரிகைகள் எல்லாம் புலிகளின் துதிபாடுகின்றன. முரளிதரன் என்ற ஒருவருக்காக எத்தனை ஆர்ப்பாட்டங்கள் செய்கின்றனர். இத்தனைக்கும் அவர் தமிழ் மக்களுக்கான ஆர்ப்பாட்டங்களின் போதோ அல்லது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரியுங்கள் என்று ஆர்ப்பாட்டம் செய்யும்போதோ கைது செய்யப்படவில்லை. அந்தத் தனிமனிதனுக்கு கொடுக்கும் மதிப்பு, யாழ்ப்பாணத்திலோ அன்றி கிளிநொச்சியிலோ இறந்த அல்லது அகதிகளாய் அபலைகளாய் பரிதவிக்கும் மக்களுக்கு கொடுக்கப்படவில்லை. காரணம் முரளிதரன் என்ற தனிமனிதனின் தனித்திறமையால் புலிகளுக்கு கிடைக்கக்கூடிய வருவாய் இல்லாது போனதே.

இதைவிட வெளிநாடுகளில் வெளிவரும் பத்திரிகைகள் புலிகளை வைத்து தங்களின் வியாபாரத்தையும் வருமானத்தையும் பெருக்குகின்றன. இதனடிப்படையில் எல்லாமே புலிகளின் ஊதுகுழலாகின்றன. எரிகிற வீட்டில் எடுக்கிறது இலாபம் என்ற அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் சாவில் தங்கள் வாழ்வுகளை எழுப்புகின்றன.

1983ம் ஆண்டிலிருந்து இன்றுவரை எமது போராட்ட வரலாற்றில் தமிழ் பேசும் மக்கள் இருந்தவைகளையெல்லாம் இழந்ததைத் தவிர எதை அடைந்திருக்கிறார்கள்? இனிமேல் அவர்கள் இழப்பதற்கு என்ன இருக்கிறது. 'அ' படிச்ச சுப்பனின் கதைபோல் ஆட்டின் தலையையும் வெட்டி, தலையை எடுக்க குடத்தையும் உடைத்த நிலையில் தமிழ் மக்கள் நிற்கிறார்கள்.

அ. வேலாயுதம், ஜேர்மனி.

www.padippakam.com



# கிழக்கைத் தற்காத்துக் கொள்ள தனிக்கட்சி அவசியமே

புதிய கண்ணோட்டம் வெளியீடு – 29 இல் (01 ஆவணி 1996) மட்டக்களப்பு கல்லடியைச் சேர்ந்த ஆத்மன் என்ற அன்பர், 17.07.96 அன்று வீரகேசரியில் வெளியான கிழக்குத் தமிழருக்கு தனி அரசியல் கட்சி அவசியம் ஏன்? என்ற கட்டுரைக்குப் பதில் கூறும் வகையில் தனது கருத்துக்களை வெளியிட்டிருந்தார். மேற்படி வீரகேசரி கட்டுரையின் ஆசிரியன் என்ற முறையிலே சில விளக்கங்களையும் வினாக்களையும் இங்கு முன்வைக்க விரும்புகின்றேன்.

இனப்பிரச்சினைத் தீர்வில் வடகிழக்கு இணைந்த சுயாட்சி அலகு என்பது தமிழர் தரப்பில் விட்டுக் கொடுக்கக்கூடிய அல்லது பேரம் பேசிச் சமரசம் செய்து கொள்ளுவதற்கான விடயம் அல்ல. கடந்த காலங்களில் பதவியிலிருந்த சகல அரசாங்கங்களும் வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராக வடக்கு கிழக்கை பிரிப்பதற்கான சூழ்ச்சிகளை திரைமறைவிலிருந்து முடுக்கி விட்டன. அதற்கு அரசாங்க கட்சி ஆதரவாளர்களையும், அமைப்பாளர்களையும், சுயநலமிக்க சில பாராளுமன்ற உறுப்பினர்களையும் பயன்படுத்திக் கொண்டன.




உதாரணமாக கடந்த யூ.என்.பி. அரசாங்கம், பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. திவ்வியநாதன், திரு. ஸ்ரீனிவாசன் போன்றவர்களைப் பயன்படுத்தியது என்பது நாம் கண்ட அனுபவம். அதே போன்றதொரு சூழ்ச்சியைத்தான் தற்போதைய அரசாங்கமும் மேற்கொண்டது. அரசு ஆதரவாளர்கள், அரசாங்க கட்சி அமைப்பாளர்கள் ஊடாக அமைச்சர் ஒருவரின் ஆதரவுடன் அபிவிருத்திக் குழு என்ற போர்வையில், கிழக்கில் ஒரு புதிய அரசியல் கட்சியொன்றினை அமைப்பதற்காக முயற்சிகள் எடுக்கப்படுவதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள்...

வடக்கு கிழக்கைப் பிரிப்பதற்கான இத்தகைய முயற்சிகளுக்கு நான் எதிரானவன் என்பதையும், வீரகேசரியில் வெளியான எனது கட்டுரை அரசாங்கத்தின் அத்தகைய சூழ்ச்சிக்கு எதிரான கருத்துக்களையே கொண்டிருந்தன என்பதை அன்பர் ஆத்மன் அவதானிக்கத் தவறிவிட்டார் என்பதையும் அழுத்தமாகச் சொல்ல விரும்புகின்றேன். ஆத்மன் அவர்கள் எனது கட்டுரையின் ஆத்மாவைத் (Spirit) தரிசிக்காமல் கிழக்குத் தமிழருக்குத் தனியான அரசியல் கட்சி என்ற தலைப்பிலுள்ள வார்த்தைப் பிரயோகங்களை மட்டும் வைத்துக் கொண்டு நுனிப்புல் மேய்ந்துவிட்டுத்தான் தனது கருத்துக்களை 'புதிய கண்ணோட்டத்'திற்கு கடிதமாக எழுதியுள்ளார் போல் தெரிகின்றது.

வீரகேசரி கட்டுரையின் முதற் பந்தியிலேயே எனது கருத்தை மிகத் தெளிவாகவே முன்வைத்திருந்தேன். அது இதுதான்.

*"கிழக்கு மாகாணத்தைத் தளமாகக் கொண்டு உருவாகும் புதிய தமிழ்க்கட்சி, வடக்கு மாகாண எதிர்ப்புணர்வுடனோ அல்லது வடக்கிலிருந்து கிழக்கைப் பிரிப்பதற்கான பின்னணியுடனோ அல்லது பிராந்திய சபை ஒன்றைக் கோரிக்கையாகக் கொண்டோ அமையுமானால் அத்தகைய செயற்பாடு தமிழ்த்தேசிய இனத்தின் ஒற்றுமையைக் குலைத்து, தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தினை மேலும் பலவீனப்படுத்தி எதிரிக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமேயல்லாமல், கிழக்கின் தனித்துவம் பேண உதவ மாட்டாது. அதுமட்டுமல்ல அத்தகைய அரசியல் நடவடிக்கை கிழக்குத் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளையும், கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் தமிழின உரிமைப் போராட்டத்தில் கிழக்குத் தமிழர் ஆற்றிவரும் காத்திரமான பங்களிப்பையும் கொச்சைப் படுத்துவதாகவே அமையும்".*

மேலும் எனது கட்டுரையின் எந்த வரிகளிலும் வடக்குக்கு எதிரான கருத்துக்கள் எதுவுமே இடம் பெறவில்லை. மாறாக வட–கிழக்கு இணைப்பை மேலும் வலியுறுத்துகின்ற கருத்துக்களே முன்வைக்கப் பட்டுள்ளன. ஆத்மன் தனது கடிதத்தில் பயன்படுத்தியுள்ள–

*"தனிக்கட்சி ஆசை...."*

*"ஊருக்கொரு மாகாணசபை கேட்டு...."*

*"ஊருக்கொரு கட்சியும் சங்கமும் அமைத்துக் கொண்டு...."*

*"மக்களைக் கூறுகூறாகப் பிரித்து விடுவதற்கான சூழ்ச்சி...."*

போன்ற வார்த்தைப் பிரயோகங்களும் வசனங்களும் எனது வீரகேசரிக் கட்டுரைக் கருத்துக்களுக்கு ஏற்புடைத்தன அல்ல.

கிழக்குத் தமிழருக்குத் தனியான அரசியல் கட்சி ஒன்று அவசியம் ஏன்? என்பதற்கு நான் முன்வைத்திருந்த காரணங்கள் யதார்த்தமானவை. இவற்றை அன்பர் ஆத்மனினால் புரிந்துகொள்ள முடியாமற் போனது ஏன்? கிழக்குத் தமிழர்களுக்கு என (தமிழ்த் தேசிய இனத்தின் பொதுவான பிரச்சினைகளை விட) அவர்கள் எதிர்நோக்கும் தனித்துவமான சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் உண்டு என்பதை ஆத்மனினால் மறுக்க முடியுமா?

தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தின் வெற்றியின் ஊடாகத்தான் கிழக்குத் தமிழர்களின் தனித்துவமான சமூக பொருளாதார அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்பது அன்பர் ஆத்மனின் எதிர்பார்ப்பாக இருக்கலாம். அத்தகைய எதிர்பார்ப்பில் நியாயங்கள் உண்டு.

ஆனால் கிழக்கு மாகாணத்தின் இன்றைய யதார்த்தமான சூழ்நிலையையும், ஒட்டுமொத்தமான தமிழ்த் தேசிய இனத்தின் இன்றைய நிலையையும் கவனத்தில் எடுக்கும் போது, கிழக்குத் தமிழர்கள் தங்கள் சமூக பொருளாதார அரசியல் இருப்பைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சில தற்காப்பு நடவடிக்கைகளைத்தானும் தற்போது கையாள வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. ஏனெனில் **கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் பண்ணமுடியாது**. அத்தகைய தற்காப்பு நடவடிக்கையே கிழக்குத் தமிழர்களுக்கு தனியான அரசியல் கட்சி ஒன்றின் அவசியம்.

எனது கட்டுரையில் இன்னுமொரு கருத்தையும் மிகத் தெளிவாகவே கூறியிருந்தேன்.

*"இன்றுள்ள தமிழ் அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் ஓரணியில் ஒரு கொடியின் கீழ் ஒன்றுபட்டு தமிழ்த் தேசிய இனத்திற்கு, வடக்குக்கும் கிழக்குக்கும் பொதுவான இணைந்த ஐக்கியப்பட்ட ஒரு அரசியல் தலைமையை ஏற்படுத்த முன்வந்தால், இந்நிகழ்வு அரசியலில் சாத்தியப்படுமேயானால் கிழக்குத் தமிழர்களுக்கெனத் தனியான அரசியல் கட்சி ஒன்றின் தேவை எழுவதற்கு நியாயங்கள் இல்லை".*

என்பதே அது. இதன் மூலம், தமிழ் அரசியல் கட்சிகள் ஐக்கியப் பட வேண்டியதன் அவசியத்தையும் தமிழின ஒற்றுமையையுமே நான் வலியுறுத்தியுள்ளேன் என்பதை ஆத்மன் அறியாமற் போனது ஏன்?

இன்று கிழக்கிலே என்ன நடைபெறுகின்றது? கிழக்குத் தமிழர்கள் கட்சி அரசியலால் கூறுபட்டு நிற்கின்றனர். இன்றுள்ள வடமாகாணத்தைத் தளமாகக் கொண்ட தமிழ் அரசியல் கட்சிகள் ஓரணியில் ஐக்கியப்படாமையினால், அவர்களுக்கிடையே நிலவும் போட்டி அரசியல் காரணமாக, கிழக்குத் தமிழர்கள் கூறுபட்டுப் பலவீனப்பட்டு நிற்கின்றனர். இதிலிருந்து அம்மக்களை விடுவித்து ஒற்றுமைப் படுத்துவது எப்படி?

கிழக்குத் தமிழருக்கு என தனியான அரசியல் கட்சி ஒன்றினாலேயே இவ்வொற்றுமையைச் சாத்தியமாக்க முடியும். தமிழ்கட்சிகள் ஐந்து பத்தாய்ப் பிரிந்து நின்று போட்டி அரசியல் நடாத்துவது சிலவேளைகளில் வடக்கில் அதுவும் வவுனியாவுக்கு அப்பால் பாதிப்பை ஏற்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் கிழக்கில் நிலைமை வேறானது.

1994ம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தல் ஓர் அனுபவப் பாடமாகும். தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தினை மேலும் முன்னெடுப்பதற்கு தமிழர்கள் பாராளுமன்றத் தேர்தல்களைப் பகிஷ்கரிக்க வேண்டியது அவசியம் எனக் காணும்போது, அதற்கான தீர்மானத்தைத் தமிழ்க்கட்சிகள் எடுத்து அதனைச் செயற்படுத்துவது என்பது வேறு. ஆனால் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது என்று தமிழ்க்கட்சிகள் முடிவெடுத்தால், கூடிய பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக்கொள்வதே ஒட்டுமொத்தமான நோக்கமாக இருக்க வேண்டும்.


ஆனால் கடந்த 1994ம் ஆண்டு தேர்தலில் என்ன நடந்தது?

தமிழ்க்கட்சிகளிடையே நிலவிய ஒற்றுமையீனத்தாலும், போட்டி அரசியல் காரணமாகவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தான்தோன்றித்தனமான சந்தர்ப்பவாத அரசியல் நடவடிக்கைகள் காரணமாகவும் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் தங்களுக்கு என இருந்த ஒரேயொரு அரசியல் பிரதிநிதித்துவத்தையும் பறிகொடுத்துவிட்டு இன்று அரசியல் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர்.

விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் 1989 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில், இரண்டு தமிழர்கள் தெரிவான திருகோணமலை மாவட்டத்திலும், நான்கு தமிழர்கள் தெரிவான மட்டக்களப்பு மாவட்டத்திலும் 1994 தேர்தலில் முறையே ஒன்றாகவும், மூன்றாகவும் குறைந்துள்ளன. தமிழ்க்கட்சிகளின் போட்டி அரசியல் காரணமாக 1994 ஆம் ஆண்டு தேர்தலில் வவுனியா மாவட்டத்திலிருந்து முதல்தடவையாக ஒரு சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவாக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தம்.

இத்தகையெதாரு நிலைமை எதிர்காலத்தில் கிழக்கில் ஏற்படாமல் தடுப்பதற்கான மாற்றுவழி–தற்காப்பு வழி என்ன? அன்பர் ஆத்மன் கூறுவாரா?

மேலும், அரசியல் அரங்கிலே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இன்று முன்வைத்துள்ள தென்கிழக்கு முஸ்லிம் மாகாணசபைக் கோரிக்கை, கடந்த நான்கு தசாப்தங்களாக தமிழர்கள் நடாத்திவரும் சுய்நிர்ணய உரிமைக்கான போராட்டத்தினைப் பலவீனப்படுத்திப் புறந்தள்ளிவிட்டு, கறையான் புற்றெடுக்க பாம்பு குடிகொண்ட கதையாக அம்பாறை மாவட்டத் தமிழர்களின் எதிர்கால சமூக பொருளாதார அரசியல் இருப்பைக் கேள்விக் குறியாக்கியுள்ளது.



**கிழக்குத் தமிழருக்கென உருவாகும் தனியான அரசியல் கட்சி ஒன்றினாலேயே தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையை சாத்தியமாக்க முடியும். தமிழ்க் கட்சிகள் ஐந்து பத்தாய்ப் பிரிந்து நின்று போட்டி அரசியல் நடாத்துவது வவுனியாவுக்கு அப்பால் வடக்கில் பாதிப்பை ஏற்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் கிழக்கில் நிலைமை வேறானது.**

இத்தகைய ஒரு அரசியல் கோரிக்கையயிட்டு, இன்று கூட்டமைத்துள்ள ஐந்து தமிழ்க்கட்சிகள் அவதானமாகவே நடந்து கொள்ளுகின்றன என்பது உண்மையாயினும், கடந்த தேர்தலில் கிழக்கிலே அதிகமான வாக்குகளைப் பெற்ற, வடமாகாணத்தைத் தளமாகக்கொண்ட அரசியல் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி, குறைந்தபட்சம் அம்பாறை மாவட்டத் தமிழர்களுடனாவது கலந்து பேசாமல், அவர்களது கருத்துக்களை அறியாமல், ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் தென்கிழக்கு மாகாண முஸ்லீம் அரசியல் அலகுக்கு தனது ஒப்புதலையும் ஆதரவையும் அளித்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இந்த அரசியல் சந்தர்ப்பவாத நடவடிக்கை, அக்கட்சி அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கு இழைத்துள்ள மற்றுமொரு துரோகமாகும்.

வடக்கு கிழக்கு இணைப்பிற்கு ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்காக அம்பாறை மாவட்டத் தமிழர்களை பகடைக் காய்களாக உருட்டி விளையாடி அரசியல் சூதாட்டம் நடாத்தும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சந்தர்ப்பவாத அரசியலை எதிர்காலத்தில் கிழக்கில் எதிர்கொள்ளுவது எவ்வாறு? ஆத்மன் இதற்கு வழி கூறுவாரா?

மேலும், வட கிழக்கு இணைப்பு, வடமாகாணத்தைத் தளமாகக் கொண்ட தமிழ் அரசியல் கட்சிகளால் வலியுறுத்தப்படுவதை விட, கிழக்கைத் தளமாகக் கொண்ட தமிழ் அரசியல் கட்சியொன்றினால் வலியுறுத்தப்படுவது அக் கோரிக்கைக்கு மேலும் அரசியல் வலுச் சேர்க்கும் என்பதை ஆத்மன் மறுக்கிறாரா?

ஆத்மன் தனது கடிதத்தின் இறுதியில்,

*"கிழக்கிற்கு தனிக்கட்சி என்று யார் உருவாக்கினாலும், அவர்கள் அதை இணைப்பிற்கு எதிரானது அல்ல என்று கூறிக்கொண்டாலும், காலப்போக்கில் அதற்கே பயன்படுத்தப்படும் என்பதில் சந்தேகம் இல்லை"* என்று அச்சம் தெரிவிக்கின்றார். தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் சம்பந்தமாக தெளிவான சிந்தனையும் அந்தரங்க சுத்தியும் உள்ள எவருக்கும் இத்தகைய அச்சம் எழத் தேவையில்லை.

வடமாகாணத்தைக் தளமாகக் கொண்டு பல தமிழ் அரசியல் கட்சிகள் உருவாகி தேவையானபோது கூட்டமைத்துச் செயல்பட முடியுமானால், தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு இம்மியளவேனும் குந்தகம் விளைவிக்காமல் கிழக்கைத் தளமாகக் கொண்டு ஓர் தனியான அரசியல் கட்சி உருவாகி கிழக்குத் தமிழரை ஒற்றுமைப்படுத்தி, கிழக்குத் தமிழர் எதிர் நோக்கும் தனித்துவமான சமூக பொருளாதார அரசியல் பிரச்சினைகள் சம்பந்தமாக தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் அதேவேளை, வடக்கைத் தளமாகக் கொண்ட தமிழ் அரசியல் கட்சிகளுடன் இணைந்து நின்று தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு பங்களிக்க முடியாதா? முடியும்.

கடந்த காலங்களைப் போலவே எதிர்காலத்திலும் வடக்கும் கிழக்கும் கைகோர்க்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

– தம்பியப்பா
கோபாலகிருஷ்ணன்.

படிப்பகம்

www.padippakam.com



# மூன்றாமவரின் துணையுடன் பேசி, முரண்படுபவரைத் தனிப்படுத்த வேண்டும்

ஆசிரியர் அவர்கட்கு,

உங்கள் இதழ் கண்டேன். வாசகர் கடிதப் பகுதி சிறப்பாக இருக்கின்றது. ஏனெனில் கடிதப் பகுதியில் மாற்றுக் கருத்துக்களையும் பிரசுரித்து கருத்து மோதலுக்குக் களம் அமைத்துக் கொடுத்துள்ளீர்கள். இது உங்கள் ஜனநாயக முறைக்கு எடுத்துக்காட்டு. மேலும் இப்பணி தொடர வாழ்த்துக்கள்.

உங்கள் கட்சி தற்போது எடுத்துள்ள தீர்வு முயற்சி காலத்துக்கு ஏற்றதாகவும் நடைமுறைக்கு ஒத்ததாகவும் தென்படுகின்றது. அதாவது, மூன்றாமவரின் நிலைப்பாடு என்பதையே சொல்கிறேன். சற்று வரலாற்றைத் திரும்பிப் பார்ப்போமாயின், பெரும்பான்மையினரும் சிறுபான்மையினரும் செய்து கொண்ட முயற்சிகளுக்கு என்ன நடந்தது என்று தெரியும்.

டட்லி–செல்வா, பண்டா–செல்வா ஒப்பந்தங்கள், ஐ.தே.க., ஸ்ரீ.ல.சு.க. போன்றவற்றால் மாறி மாறி கிழித்து எறியப்பட்டன. ஏனெனில் இரு கட்சிகளுக்குப் பின்னாலும் சக்தி மிக்க புத்தபிக்குகள் மற்றும் இனவெறிபிடித்த கூட்டத்தினர் நிற்கிறார்கள். இருபகுதியினரும் செய்து கொள்ளும் ஒப்பந்தங்களை நிறைவேற்ற அவர்கள் விடமாட்டார்கள்.

பின்னாளில் மாவட்ட சபைத் தீர்வை முன்வைத்த ஜே.ஆர்., யாழ் நகரில் இராணுவத்தை ஏவி எத்தனை சொத்துக்களுக்கு தீ வைத்தார், எத்தனை உயிர்களுக்கு உலை வைத்தார் என்பது உலகத்துக்குத் தெரிந்த விடயங்கள்.

இலங்கைப் பிரச்சினையில் கரிசனை கொண்டு, தீர்வு முயற்சிக்கு அயல் நாடான இந்தியா முன்வந்தது. தமிழ்த் தலைவர்கள் சம்பந்தமில்லாமல் இலங்கை, இந்திய அரசுத் தலைவர்களால் செய்துகொள்ளப்பட்டதுதான் இலங்கை–இந்திய ஒப்பந்தம். இருந்தும் இவ் ஒப்பந்தத்தினால் கூடுதல் நன்மையடைபவர்கள் தமிழர்களாகவே காணப்பட்டனர். ஒருசில நன்மைகளை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

வட–கிழக்கு இணைந்த மாகாணசபை, சிங்களக் குடியேற்றம் தடுக்கப்படுதல், தமிழர்களின் பாதுகாப்புக்கு பொலிஸ் படை அமைத்துக் கொள்ளல் போன்ற நல்ல அம்சங்கள் காணப்பட்டன.

இந்த ஒப்பந்தத்தில், இந்தியாவின் மறைமுக மிரட்டலினாலேயே இலங்கையரசு சம்மதித்து கையெழுத்திட்டது. ஆரம்பத்திலிருந்து சிங்கள அரசியல்வாதிகள் எதிர்த்து வந்தனர். இதனை உடைப்பதற்கு கால நேரம் பார்த்துக்கொண்டிருந்தனர். தென்பகுதியில் ஜே.வி.பி.யின் இந்திய எதிர்ப்புவாதம் கிளப்பப்பட்டு வளர்க்கப்பட்டு வந்தது. மறுபுறம் பிக்குமாரின் இந்திய எதிர்ப்பு வாதம் தீவிர நிலையில் இருந்தது.

இலங்கை அரசியல்வாதிகள் தங்கள் சுயநல நோக்கம் கருதி தேர்தல் காலத்தில், தாங்கள் பதவிக்கு வந்தால் இந்தியன் ஆமியை வெளியேற்றுவோம் என குரல்கொடுத்தார்கள். இவ்வாறு குரல் கொடுத்தவர்களில் பிரேமதாசா முக்கியமானவர்.

தேர்தலும் வந்தது. பிரேமதாசா வெற்றி பெற்றார். இந்தியன் ஆமி வெளியேறவில்லை. ஏனெனில் இரு நாட்டின் சம்மதத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் அல்லவா? தென்பகுதியில் ஜே.வி.பி., ஸ்ரீ.ல.சு.க., இனவாத கட்சிகள், பிக்குகள் போன்றோர், மக்களிடையே "இந்தியா இலங்கையைத் தன் மாநிலமாக மாற்ற நினைக்கிறது; இவர்கள் போக மாட்டார்கள்; ஈழம் பிரித்து கொடுக்கப்பட்டுள்ளது; இலங்கையை ஐக்கிய தேசியக் கட்சி விற்று விட்டது...." போன்ற கருத்துக்களை மேடைகளிலும் பத்திரிகைகளிலும் பரப்பினார்கள்.

இதனால் ஐக்கிய தேசிய கட்சிக்குத் தலையிடியாக இந்தியன் ஆமி பிரச்சினை தென்பட்டது. ஏனெனில் தென்பகுதியில் ஜே.வி.பி.க் காரர்கள் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்களை நாளுக்கு நாள் கொன்று குவித்து வந்தனர்.

பிரேமதாசா, தனக்கு விசுவாசமான உறுப்பினர்களுடன் பேசி ஒரு முடிவுக்கு வந்தார். தென் பகுதியில் ஜே.வி.பி.யின் நடவடிக்கைகளுக்கு முடிவுகட்ட வேண்டுமாயின் இந்தியன் ஆமியை வெளியேற்ற வேண்டும். அது செய்வது கடினமானது. எனவே, எல்.ரி.ரி.ஈ. யுடன் பேச்சு வார்த்தைக்குக் கூப்பிட்டார்.

அவர்களும் இந்தியன் ஆமியின் இராணுவ நடவடிக்கைகளால் தாங்கள் அழிக்கப்படுவோம் என அச்சம் கொண்டு இருந்தனர். ஆகவே நல்ல நண்பன் கிடைத்து விட்டான் என சந்தோசப்பட்டார்களே ஒழிய, தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினை பற்றி சிந்திக்கவில்லை.

இந்நேரத்தில்தான் ஈ.பி.ஆர்.எல்.எவ்., 'தமிழ் மக்களுக்குக் கிடைத்த மாகாண சபையைக் குழப்பி அவர்களைப் படுகுழியில் தள்ளாமல், எல்.ரி.ரி.ஈ. விரும்பினால் மாகாண சபையை ஏற்றுக்கொள்ளட்டும். நாம் விட்டுக்கொடுக்கத் தயார் என்று அறிவித்தது.

ஆனால், எல்.ரி.ரி.ஈ.யின் சுயநலப் போக்கும், விட்டுக்கொடாமையும், பழிவாங்கும் போக்கும், மக்கள் நலனைப் பொருட்டாக மதிக்காத அளவுக்கு மேலோங்கியிருந்ததால், எதிரியான சிறிலங்கா அரசுடன் கபடத்தனமாக ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.



யாழ்ப்பாணம் போய் பேசினார்கள். பேச்சுவார்த்தையின்போது எல்.ரி.ரி.ஈ., இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்டங்களை முன்வைக்கவில்லை. 'பொருளாதாரத் தடையை நீக்கு, பூநகரி முகாமை அகற்று, கிழக்கில் ஆயுதங்களுடன் உலாவ அனுமதி' போன்ற கோரிக்கைகளையே முன்வைத்தார்கள். இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்தாலும், இந்த ஒப்பந்தத்தை தான் செய்யவில்லை ஒப்பந்தம் செய்தவர்கள் தங்கள் இயக்கத்தில் இல்லை என நொண்டிச்சாட்டு சொல்லி ஒப்பந்தத்தை உடைக்க கூடியவர் பிரபாகரன்.

இந்த ஒப்பந்தத்தில் என்ன செய்து கொண்டார்கள் என்பது சிங்கள மக்களுக்கோ, தமிழ் மக்களுக்கோ இன்றும் முழுமையாக தெரியாது. ஆனால் 7,8 மாதங்கள் பேச்சுவார்த்தை என கொழும்புக்கும் வவுனியா காடுகளுக்கும் இரு தரப்பினரும் அலைந்தார்கள்.

எல்.ரி.ரி.ஈ. தனக்கு வேண்டிய பணம், ஆயுதங்கள், தோட்டாக்கள் தேவை என்றும், தங்கள் முக்கிய தலைவர்கள் தங்குவதற்கு பாதுகாப்பான இடங்கள் தேவை என்றும், வெளிநாடு செல்வதற்கு வசதி செய்து தர வேண்டும் என்றும் கோரினார்கள். பிரேமதாசாவும் உடனடியாக பச்சைக்கொடி காட்டினார். ஏனெனில், இவர்கள் கேட் பதில் ஒன்றுமே தமிழ் மக்களின் பிரச்சினையாக தென்படவில்லை. அவ்வாறு இருந்தால்தானே அமைச்சர்களை கூட்டவேண்டும், பாராளுமன்றத்துக்கு எடுத்துச் சொல்ல வேண்டும், பத்திரிகைகளுக்கு பதில் சொல்ல வேண்டும்.

எல்.ரி.ரி.ஈ.யின் கோரிக்கைப்படி, முக்கிய உறுப்பினர்கள் தங்குவதற்கு கொழும்பில் ஹோட்டல் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. ஆயுதங்கள் தோட்டாக்கள் வவுனியாவில் வைத்துப் பரிமாறப்பட்டது. யாழ்ப்பாணப் பொறுப்பாளர் கிட்டு லண்டன் வர அனுமதிக்கப்பட்டார்.

இவ்வசதிகளால் எல்.ரி.ரி.ஈ. புதுப் பொலிவு பெற்று இந்தியன் ஆமிக்கும் மாகாண அரசுக்கும் எதிராக முக்கியமான தாக்குதல்களைத் தொடுத்தது. இந்தியா அதிர்ந்து நின்றது. இலங்கையின் இந்திய ஆமி வெளியேற்றக் கோரிக்கையினால் இந்தியா சற்று சிந்திக்க தொடங்கியது. தமிழீழ தேசிய இராணுவத்தைக் கட்ட சகல உதவிகளையும் செய்து கொடுத்தது.

இந்நேரத்தில் இந்திய தேர்தல் நடைபெற்றது. தேர்தல் காலத்தில் வி.பி.சிங், 'இந்தியன் ஆமியை திருப்பியழைப்பேன்' என கோசமிட்டார். பதவிக்கு வந்ததும் திருப்பியழைக்க உத்தரவிட்டார். இவரும், இதை இரு நாடுகளும் செய்து கொண்ட ஒப்பந்தமாக கருதாமல் ராஜீவின் ஒப்பந்தமாகவே கருதினார்.

மீண்டும் அண்மையில் சந்திரிகா–பிரபா ஒப்பந்த ஏற்பாட்டுக்கு பேச்சுவார்த்தை நடைபெற்றது. யாழ்ப்பாணம் போய் பேசினார்கள். பேச்சுவார்த்தையின்போது எல்.ரி.ரி.ஈ., இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்டங்களை முன்வைக்கவில்லை. 'பொருளாதாரத் தடையை நீக்கு, பூநகரி முகாமை அகற்று, கிழக்கில் ஆயுதங்களுடன் உலாவ அனுமதி' போன்ற கோரிக்கைகளையே முன்வைத்தார்கள். இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்தாலும், இந்த ஒப்பந்தத்தை தான் செய்யவில்லை ஒப்பந்தம் செய்தவர்கள் தங்கள் இயக்கத்தில் இல்லை என நொண்டிச்சாட்டு சொல்லி ஒப்பந்தத்தை உடைக்க கூடியவர் பிரபாகரன்.

எல்.ரி.ரி.ஈ. சிறுபிள்ளைத்தனமாக நடந்துகொள்பவர்கள். சிறு வயதில் வகுப்பில் அழிறப்பர், பென்சில் சண்டை மாதிரி ஈடுபடக் கூடியவர்கள். ஆகவே மூன்றாம் நபர் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் எல்.ரி.ரி.ஈ. சேர்த்துக்கொள்ளப்பட்டால் நேரடியாக பிரபாகரனே கையொப்பமிட வேண்டும்.

மூன்றாமவர் தலையீடு என்பது ஒரு நாட்டின் தலையீடாக இருக்க தேவையில்லை. உலகநாடுகளின் கூட்டான தலையீடாக இருப்பது நல்லது. அப்படியிருந்தால்தான் தலையீடு என்பது ஐ.நா. ஸ்தாபனத்தின் சரத்துக்கமைய இருக்கும். மீறும் பகுதியினர் மேல் நடவடிக்கை எடுப்பது இலகுவாக இருக்கும். அதாவது, பொஸ்னியாவில் உலக நாடுகள் தலையிட்டதை உதாரணம் கூறலாம்.

எந்தப் பிரச்சினை தீர்வதற்கும், எல்லோரும் உடன்பாட்டுக்கு வர மாட்டார்கள். ஆனால் முரண்படுபவர்களை இனம் கண்டு தூக்கியெறியலாம். ஆரம்பத்தில் மக்களிடையே எதிர்ப்பு இருந்தாலும் ஒப்பந்த சரத்துக்களை மக்கள் புரிந்துகொண்டு விட்டால் ஆதரவு தருவார்கள்.

ஆகவே, காலம் தாழ்த்தாது மூன்றாமவரின் தலையீட்டுக்கு தூண்டக்கூடிய பேச்சுவார்த்தை, கலந்துரையாடல் போன்றவற்றை நீங்கள் முன்முயற்சியெடுத்து ஆரம்பிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

*உண்மையுள்ள வாசகன்,*
*ராஜேஸ், பரிஸ்.*

# புலிகளின் துரோகம்



ஈழவிடுதலை என்பது சிங்கள இனவாத சக்திகளால் ஏற்படுத்தப்பட்டது. அதன் வெளிப்பாடாக செல்வநாயகம் போன்றோர் சிங்கள பேரினவாத அரசுக்கு எதிராக சத்தியாக்கிரகம் போன்ற அகிம்சைப் போராட்டங்களில் இறங்கினார்கள். இனவாத அரசு காடையர்களை ஏவி தமிழ் மக்களின் அகிம்சை போராட்டத்தை நசுக்கியது.

தொடர்ந்தும் பல்வேறு சாத்வீக போராட்டங்களை தமிழ்த் தலைவர்கள் நடாத்தினார்கள். இனவாத அரசு தமிழ் மக்களின் ஜனநாயக போராட்டத்துக்கு மதிப்பளிக்காமல் காட்டுமிராண்டி நடவடிக்கைக்கு ஊக்கமளித்தனர். இதன் உச்சகட்டமாக தமிழாராய்ச்சி மாநாட்டில் காவல்படையை ஏவி காடைத்தனம் புரிந்தமை ஒரு உதாரணம்.

இளைஞர்கள் அகிம்சை நடவடிக்கையில் நம்பிக்கையிழந்து ஆயுத போராட்டத்தில் இறங்கினர். அவர்கள் தங்கள் விருப்பப்படி ஆரம்பத்தில் குழுக்களாக இயங்கினர். பின்னாளில் தமிழ் மக்களின் ஆதரவினால் இயக்கங்களாக செயல்பட்டனர். தமிழ்நாட்டு அரசின் ஆதரவு கிடைத்தமையால் அங்கு தளங்கள் அமைத்து வெவ்வேறு போராட்ட முறைகளில் போராடினர்.

ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., என்.எல்.எப்.டி போன்றன மக்கள் போராட்டம் என்றும் புளொட், எல்.ரி.ரி.ஈ.,ரெலோ, ரெலா, ரெலி போன்றன கெரில்லா போராட்டம் என்றும் பல்வேறு வழிமுறையில் போராட்டத்தில் இறங்கினர்.

எல்லோரும் இனவாத சக்திக்கு எதிராக இறங்கியமையால் இனவாத அரசு நடுங்கியது. தமிழ் மக்கள் நேரடிப் பங்களிப்பு செய்யாவிட்டாலும் எல்லாப் போராளிகளையும் தங்களின் பொடியன்கள் என்று ஆதரவு வழங்கினர். (குறிப்பிட்ட குழுவினர் குறிப்பிட்ட சில இயக்கத்துக்கு ஆதரவு வழங்கினர் என்பதனால் தமிழ் மக்கள் எல்லோரும் குறிப்பிட்ட இயக்கத்துக்கு மட்டும் ஆதரவு என்று சொல்ல முடியாது.)

ஏகாதிபத்திய ஆயுத ஏஜென்ஸிகள், தனிநபர் ஆயுதக் கடத்தல்காரர், போதைவஸ்துக் கடத்தல்காரர் போன்றோர் தங்கள் நண்பன் எல்.ரி.ரி.ஈ. மூலம் ஐரோப்பிய நாடுகளுக்கு போதைவஸ்து அனுப்பினார்கள்.

அதன் மூலம் கிடைத்த பணத்தில் எல்.ரி.ரி.ஈ.யினர் ஓர் அரசாங்கம் வாங்க கஷ்டப்படும் ஆயுதங்களையெல்லாம் அதிக விலை கொடுத்து வாங்கினார்கள். உதாரணம் ஒன்றைக் கூறலாம். 1987ம் ஆண்டு காலப் பகுதியில் இராணுவம் முன்னேறும்போது, புலிகள் யாழ்ப்பாண வீதிகளில் வைத்து அதிநவீன ஆயுதங்களை புதுப்பெட்டி உடைத்து எடுப்பார்கள். மக்கள் குழுமி நின்று வேடிக்கை பார்ப்பார்கள்.

இந்த போதைவஸ்து கடத்தலினால், சில உள்நாட்டு வெளிநாட்டு

தொடர்ச்சி 10

படிப்பகம்

www.padippakam.com





# யாழ்ப்பாணக் கடிதத்தி லிருந்து....

அன்புடையவர்கள் அனைவருக்கும்,

நாம் நலமுடன் வீடு வந்து சேர்ந்தோம். எனது வேலை மீண்டும் கிடைத்திருக்கின்றது. அது கிடைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டவர்கள் எல்லோருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்ளவும்.

நாம் எமது சொந்த இடத்தில்தான் இருக்கின்றோம். எமது வீடு பழுதடைந்ததால் பக்கத்து வீட்டில் தான் இருக்கின்றோம். சரசாலைப் பகுதியில் ஒரு காவலரணுக்கு வெடிவைத்துவிட்டு இயக்கம் ஓடி விட்டது. அந்த வீட்டுக்காரனுக்கு ஆமி வந்து நன்றாக அடித்து விட்டார்கள். எமது பகுதியிலிருந்து திருநெல்வேலி வரைக்கும் முழுக்க ஆமிதான். ஆனால் ஐந்து இடத்தில் ஏறி இறங்க வேண்டும். பெரிதாக கெடுபிடி என்றில்லை. ஓரளவு பண்பாகவும் கதைக்கின்றார்கள். அதுவும் இளம் பெண்களுடன் மிகவும் அன்னியோன்னியமாக பழகுகின்றார்கள். இது இயக்கத்திற்கு வாய்ப்பாகவும் அமையலாம்.

கடந்த 01.11.96 அன்று கைதடியில் கிருஷாந்தி கொல்லப்பட்டதற்கு ஆட்சேபணை தெரிவித்து பாடசாலை மாணவரமைப்பு ஓர் கர்த்தாலுக்கு அழைப்பு விடுத்தது. அநேகமான கடைகள் பூட்டப்பட்டிருந்தன. பாடசாலை வரவகள் மிகக் குறைவாக காணப்பட்டன. அரச கருமபீடங்கள் ஸ்தம்பிதமடைந்திருந்தன. யாழ்நகரில் வெளியில் உள்ள பகுதியில்தான் நடந்திருக்கின்றது.

மேலே குறிப்பிடப்படும் பண்(Bund) டானது யாழ்நகர் தட்டாதெருச் சந்தியிலிருந்து கலட்டிச் சந்திக்கு வந்து, யாழ் பல்கலைக்கழகத்திற்கும் மருத்துவபீடத்திற்கும் இடையால் சென்று, பலாலி றோட்டின் மேற்குப் பக்கமாக சென்று, தெற்குப் புன்னாலைக்கட்டுவன் சந்தி சென்று, சுன்னாகம் சென்று, அப்படியே கே.கே.எஸ். செல்லுகின்றது. அதற்குள் மல்லாகம் சந்திக்கும் சுன்னாகத்திலும் குறைந்தளவு சனங்கள் இருக்கின்றனர். மற்றும் பண்(Bund)டுக்குள் சனங்கள் சரியான குறைவுதான். யாழ்நகரை அண்டிய பகுதியில்தான் நிறைய சனங்கள் இருக்கின்றார்கள். பண்(Bund)டுக்கு வெளியில் இருக்கும் சனங்களில், அரச ஊழியர்கள் தினமும் உள்ளே வந்து செல்லலாம். ஏனையவர்கள் திங்கட்கிழமை மட்டும்தான் வந்து செல்லலாம்.

வடமராட்சிப் பகுதியைப் பற்றி ஒன்றும் அறிய முடியவில்லை. ஆனால் சனங் கள் நன்றாக ஆமிக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக கூறப்படுகின்றது.

இங்கிருந்து போன் எடுப்பது சிரமமா னது. அதாவது காலை 7 மணிக்குப் பதிவு செய்தால்தான் பிற்பகல் 3 மணிக்குப் பின்பு 'லைன்' போட்டுக் கொடுக்கின்றார்கள். அதன் பின்பு, பதிவு செய்தவர்கள் அனைவரும் கதைத்துப் போட்டு போவதற்கு நகர



கிருஷாந்தி, தாய், சகோதரன்

பூட்டிய கடைகள் பல இராணுவத்தின ரால் திறந்துவிடப்பட்டன. சன நடமாட்டம் எல்லா இடங்களிலும் மிகவும் குறைந்திருந்தன என்றும் அறிந்தேன். இந்த ஹர்த்தாலை பண்ட்(Bund)க்கு வெளியில் நிற்கும் இயக்கம்தான் செய்விச்சது என்று எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. இதன் பின்பு மாணவர்கள் மீதும், அதற்கு ஆதரவு தெரிவித்தவர்களுட னும் இராணுவம் இப்போது அதிகமாக கண்ணோட்டத்தை செலுத்துகின்றது.

யாழ் பல்கலைக்கழகத்தில் தூவானம் ஓயவில்லை. ஆனால் வலிகாமம் பகுதிக்கு திரும்பி வந்தவர்கள் நன்கு இயக்கத்தை வெறுத்துப்போய் இருக்கின்றார்கள். இடையிடையே ஆமிக்கு உண்மையான தகவல்களை யும் கொடுத்துக் கொண்டிருக்கின் றனர். அண்மையில் உடுவில் பகுதியில் சாப்பாடு கொடுத்துவிட்டு, ஆமியிடம் போய்ச் சொல்லி மூன்று பேரைக் கொன்றும், இருவரைப் பிடித்துமுள்ளார்கள். அண்மையில் சுதுமலைப் பகுதியில் ஓர் மரத்தில் ஏறி ஆமி பதுங்கி இருந்திருக்கிறது. அவ்வழியால் இயக்கத்தினர் ஆறு பேர்கள் வந்திருக்கின்றார்கள். அந்த ஆறு பேர்களையும் இராணுவத்தினர் சுட்டுவிட்டார்களாம். பண்டுக்கு(Bund) மக்களுக்குத்தான் முடியும். இந்நிலை மை ஓரளவு சீரடையும் போதுதான் போனில் கதைப்பது சாத்தியப்படும்.

அண்மையில் யாழ்நகர் ரவுணில் ஒரு குண்டு எறியப்பட்டது. ஆனால் ஆமி திருப்பிச் சுடவில்லை.

இன்று பல்கலைக்கழகத்தின் கலைப் பீட ஒன்றுகூடல் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுகின்றது. ஓர் இசைக் குழுவினரையும் அழைத்து கச்சேரியும் நடந்து கொண்டிருக்கின்றன.

மற்றும் மின்சாரம் நகரத்தின் மையப்பகுதிக்கு இரவு 10 மணிவரை கொடுக்கப்பட்டிருக்கின்றது. இப்படி ஒவ்வொரு பகுதியிலும் கொஞ்சக் கொஞ்ச இடத்திற்கு கொடுக்கப்பட் டிருக்கின்றது. நீர் விநியோகமும் அரியாலைச் சந்திவரை விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றது. ஆனாலும் இங்கே எல்லாப் பகுதியிலும் பி.ப. 5 மணி யுடன் சனம் அடங்கிவிடுகின்றது. மொத்தத்தில் யாழ்ப்பாணம் நன்றாக களைத்துப்போயுள்ளது. களைப் பாறுவது போலவே தென்படுகின்றது.

மீண்டும் மறுமடலில்,

- அந்தோனிப்பிள்ளை

# குறுக்கெழுத்துப் போட்டி-28

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | | 4 | | 5 | |
| | ■ | 6 | 7 | | ■ | | ■ | | ■ |
| 8 | | | | ■ | 9 | | | | 10 |
| ■ | ■ | | ■ | 11 | | | ■ | 12 | |
| 13 | 14 | | 15 | | | ■ | 16 | | |
| 17 | | ■ | 18 | | | | ■ | 19 | |
| 20 | | | | ■ | | ■ | 21 | | |
| 22 | | ■ | ■ | 23 | | | | ■ | ■ |
| 24 | | 25 | 26 | | | ■ | 27 | 28 | 29 |
| | ■ | 30 | | | ■ | 31 | | | |

## இடமிருந்து வலம்

1. கார்த்திகை மாதத்தின் கதாநாயக அமைச்சர்.
3. ஒரு கண்ணில் வெண்ணெயும் மறு கண்ணில் சுண்ணாம்புமாக.... பக்கச் சாய்வு.
6. கதிரவன் வரவு கண்டு மலரும்.
8. கையால் சிறுசிறு பொருட்கள் செய்யப் பழகும் பள்ளிப் பாடம்.
9. வில்.
11. சுவடு.
12. பொய்த் தோற்றம். கடைசி எழுத்தில்லை.
13. திமிர்.
16. இசைக்கு ஆதாரமாக எழுப்பப்படும் ஒலி.
17. இதை நாடாவிட்டால் ஏது வீடு என்பது வாத்தியார் பாட்டு.
18. பெரும்பாலும் மத்திய இந்தியாவைச் சார்ந்த நாடோடிக் கூட்டத்தினர்.
19. 'து' சேர்த்தால் கண்டம்; 'தை' சேர்த்தால் பெண்; 'தம்' சேர்த்தால் முழுதாய் ஒப்படை.
20. அக்குள்.
21. பாரதக் கதையில் சிகண்டியாகப் பிறந்து பீஷ்மரைப் பழிவாங்கியவள்.
22. சுத்தமான நிலையில் வைரமும் இதுதான். (தலைகீழ்)
23. இதன் இலைகளும் கீரையாக பயன்படுகிறது.
24. அரசகுமாரிகள் வசிக்கும் மாளிகையின் பகுதி.
27. இறைவன் ஒருவன் என்பதிலும் இறைதூதர் முகமது நபி என்பதிலும் நம்பிக்கை கொண்டு சொல்லும் மந்திரம்.
30. அன்புடனான அக்கறை.
31. பிஞ்சிலே பழுத்தது.

## மேலிருந்து கீழ்

1. சுற்றிவளைத்து பேச்சுக்கு முன்னுரை.
2. நிறுவனம்.
3. நெட்டிருப்புப் ----க்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும்.
4. உறவு.
5. சூறாவளி.
7. நாதமுண்டு குழலில்லை; நாக்குண்டு உமிரில்லை; கோயிலிலுண்டு கொடியில்லை.
9. தமிழ்நாட்டின் ஹொலிவூட் நகர்.
10. மனநிலைப் பிறழ்வு. (தலைகீழ்)
11. முனிவர்கள் செய்வது.
13. பண்பாடற்ற தன்மை.
14. காதில் போடுவது.
15. இரு கரைகளையும் இணைப்பது.
21. கூடுதல்.
23. பரதநாட்டியத்தில் சொற்கட்டை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்படுவது.
25. ஆதவன் எழ மறைவது. (தலைகீழ்)
26. கொடைக்குப் பாரி ஒருவன் மட்டுமல்லவாம் இதுவுமுண்டு.
28. சாவு. நடுவே 'ல்' சேர ஊர்வன ஒன்று; 'லா' சேர வடக்கில் முகாம் உள்ள ஊர். (தலைகீழ்)
29. நாராயணன்.

## கு.எ.போட்டி-27 விடைகள்:

**இடமிருந்து வலம்:**

1. கிளிநொச்சி
4. அறிவிலி
6. ராகம்
7. கண்டிலர்
9. பாசாங்கு
12. கத்தரிக்கோல்
14. துரிதம்
15. பிரதி
17. வாணிபம்
21. வேடிக்கை
22. திராவிடம்
24. சக்கை
26. போர்
27. (மு)காம்
28. பலராமன்
31. துல்லியம்
32. தேக்கு

**மேலிருந்து கீழ்:**

1. கிரகப்பிரவேசம்
2. நொண்டி
3. சிரார்த்தம்
4. அம்பாரி
5. வியங்கோள்
8. லகரி
10. சாக்(கு)
11. குல்(லா)
13. தம்பதி
14. துதிக்கை
16. பிடிக்காது
18. மகாராணி
19. வாவி
20. மேம்போக்கு
23. (இ)டர்
25. கலய(ம்)
28. பலி
29. ராம்
30. தேன்

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

கு. ஞானசீலன்,
பிரதான வீதி,
மட்டக்களப்பு.

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப் பட்ட ஆறு பேர்கள் வருமாறு:**

1. சிறிபவன் காயத்ரி,
   11/9, ஔவையார் வீதி, திருகோணமலை.
2. ம. ஜோண் பப்ரிஸ்ர்,
   அடம்ஸ்பீக் தோட்டம், மஸ்கெலியா.
3. வி. கந்தசாமி,
   குருமண்காடு, வவுனியா.
4. மா. அழகுசுந்தரம்,
   காலி வீதி, கொழும்பு 06.
5. ஜெ. மேனகா,
   256/6, உள்துறைமுக வீதி,
   திருகோணமலை.
6. இராஜேஸ்வரி சிவசுந்தரம்,
   198, கோவிலடி, மஸ்கெலியா.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 10ந் திகதிக்கு முன் அனுப்பிவையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்,
த.பெ.இல: 442,
கொழும்பு.**

"ஒருவன் தன் ஜன சமூகத்தின் ஊடே எந்த அளவுக்குத் தன்னைக் கரைத்துக் கொள்கிறான் என்பதைக்கொண்டே அவன் வாழ்க்கை மேம்பாடு அமைகிறது. மேன்மை என்பது, தன் கால மக்களின் சுக துக்கங்களில் தன்னைக் காண்பதும், பங்கு கொள்வதும் ஆகும் என்பது என் கருத்து. மக்களைச் சுரண்டும் எந்த அமைப்பையும் கேள்வி கேட்கிற, மக்களை அடிமைப்படுத்தும் எந்த அமைப்பையும் எதிர்க்கிற, சத்திய ஆவேசம் இருப்பவர் எவரோ, அவரே மேலான மனிதர்; மனிதர் என்கிற சொல்லுக்குத் தகுதியானவர். மற்றவர் மனிதகுல விரோதிகளே ஆவர்."

– பிரபஞ்சன்

படிப்பகம்

www.padippakam.com



# ஜே.ஆர். ஜெயவர்த்தன சில நினைவுகள்



ஜே. ஆர். ஜெயவர்த்தன மறைவு குறித்து பலர் பலவிதமான வியாக்கியானங்களைச் செய்கிறார்கள். 50 வருட அரசியல் அனுபவம், திறந்த பொருளாதாரக் கொள்கையின் தந்தை என்றெல்லாம் புகழாரம் சூட்டுகிறார்கள்.

இறந்தவர்களைப் பற்றி புகழ்ச்சியாக மட்டுமே எதையாவது சொல்வதுதான் மரபு. ஆனால்....

15 வருடங்களாக இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடுகிறதே... ஆயிரக்கணக்கான மக்கள் மரணித்தார்களே!... பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் சிறைகளில் வதைமுகாம்களில் அடைபட்டார்களே!... காணாமல் போனார்களே!... பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் நடுத்தெருவுக்கு அனுப்பப்பட்டார்களே.... இவையெல்லாம் மௌனமாக நம் மனத்துள்ளே புதைத்துவிடக் கூடியவைதானா?

ஜே.ஆர். சிங்களப் பெரும்பான்மை மக்களின் அமோக ஆதரவுடன் பதவி ஏற்ற 1977ம் ஆண்டிலேதான், 1958இற்குப் பின்னர் மீண்டும் இனக் கலவரம் நாடு தழுவிய அளவில் வெடித்தது. 1977, 1981, 1983 இந்த மூன்று நாடளாவிய வன்முறைகளும் ஜே.ஆர். ஆட்சிக்காலத்தில்தான் நடைபெற்றன.

எத்தனை ஆயிரம் தமிழ் மக்கள் இந்த மூன்று இன வன்முறையிலும் உயிரிழந்திருக்கிறார்கள்... எத்தனை கோடிக்கணக்கான சொத்துக்கள் சூறையாடப்பட்டன...

ஜே.ஆர். பதவிக்கு வந்து மறு வருடம்தான் 1977இல் புலித்தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட கையோடு 9 தமிழ் இளைஞர்கள் காணாமல் போனார்கள். இருவரின் பிணங்கள் பண்ணைக் கடலில் மிதந்தன.

1979இல் பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டம் இன்றுவரை அகற்றப்படவில்லை. இந்தச் சட்டத்தின் கீழ் ஒருவரை 18 மாதங்கள் விசாரணை இன்றி தடுத்து வைப்பதற்கும், ஏன் கொல்லப்பட்டால் பிரேத பரிசோதனை இன்றி செய்வதற்கும், சாட்சிகள் இன்றி சித்திரவதைகளை மேற்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் எடுப்பதற்கும் அனுமதி உண்டு.

1980இல் வேலை நிறுத்தம் செய்த ஒன்றரை லட்சம் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தமை. அதில் 40 ஆயிரம் பேர் திரும்பவும் சேர்த்துக் கொள்ளப்படவேயில்லை.

தொழிலாளர் விரோத, இடதுசாரி விரோத செயற்பாடுகளில் ஜே.ஆர். முன்னணியில் நின்றவர். இடதுசாரிகளை 'நக்சல்பாரிகள்' என்று குற்றஞ்சாட்டி சிறைகளிலும் வதைமுகாம்களிலும் தள்ளியவர். விஜேகுமாரதுங்கா, வாசுதேவ நாணயக்கார போன்றவர்களும் சிறைகளில் அடைக்கப்பட்டார்கள்.

தனக்குள்ள பாராளுமன்றப் பெரும்பான்மையைப் பாவித்து 1978இல் அரசியல் யாப்பை உருவாக்கி, தன்னைத் தானே சக்கரவர்த்தியாக்கி முடி சூடிக்கொண்டவர். அந்த ஜனாதிபதி முறை பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவினாலும், (ஒருவர் ஜனாதிபதியாக வருவதற்கு சிறுபான்மையினரின் வாக்குகளிலும் தங்கியிருக்க வேண்டும் என்பது போன்ற கருத்துக்கள்) ஒரு தனி மனிதனிடம் அதிகாரங்கள் குவிந்ததன் விளைவு, அனர்த்தங்களை இலங்கை மக்கள் அனுபவித்தார்கள்.

1977இல் யாழ் நூலகம் எரிக்கப்பட்டு ஒரு கலாசாரப் படுகொலை நடாத்தப்பட்டதும் ஜே.ஆர். ஆட்சிக் காலத்தில்தான். இதற்கு காமினி திசாநாயக்கா போன்றவர்கள் உடந்தையாக இருந்தார்கள் என்பதெல்லாம் ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

'ஜாதிக சேவக சங்கமய' போன்ற இனவாத பிற்போக்குவாதத் தொழிற் சங்கங்கள் உருவாக்கப்பட்டதும் ஜே.ஆர். காலத்தில்தான்.

குண்டர் அரசியலுக்கான அடித்தளமிடப்பட்டதும் இவருடைய காலத்தில்தான். பிரேமதாசா, சிறில்மத்தியு, சிறிசேனகுரே போன்றவர்களுக்கு கீழ் குண்டர் கோஷ்டிகள் உருவாக்கப்பட்டன.

1983 இனக்கலவரங்களில் இத்தகைய குண்டர் கோஷ்டிகளின் பங்களிப்பு எத்தகையது என்பது யாருக்கும் தெரியாததல்ல.

1981 மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் மிக மோசமான மோசடிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் உயர்வர்க்க அரசியல்வாதிகள் இந்த குண்டர் கோஷ்டிகளை ஒரு கருவியாகப் பாவித்தன.

1982இல் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பிலும் இதே மோசடிகள் பெருமளவில் நடைபெற்றன. வாக்குப் பெட்டிகள் அபகரிக்கப்பட்டன.

5 வருடங்களுக்கொருமுறை தேர்தல் நடத்தப்பட வேண்டியது இந்த நாட்டு மக்களின் ஜனநாயக உரிமை. அதுவும் ஜே.ஆரால் பறித்தெடுக்கப்பட்டது.

ஜே.வி.பி. தடைசெய்யப்பட்டதும் இக்காலப் பகுதியில்தான். ஜனநாயக வழியிலான அரசியலில் செயற்பட்டவர்களை ஆயுதம் ஏந்த நிர்ப்பந்தித்தது இந்த ஜே.ஆர். ஆட்சிதான்.

இராணுவத்தை அவசரகாலச் சடத்தின் கீழ் இல்லாமல் சேவைக்கு அழைக்கமுடியாது. ஆனால் சாதாரண சட்டங்களின் கீழ் இராணுவ செயற்பாடுகளுக்கு வழிவகுக்கப்பட்டது. விசேட அதிரடிப்படை பொலிசில் உருவாக்கப்பட்டதும் அந்த நோக்கோடுதான்.

1951இல் பண்டா–செல்வா ஒப்பந்தத்திற்கெதிராக கண்டியாத்திரை போனவரும் 1983 இனவன்முறையில் நாடு எரிந்து கொண்டிருக்கையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து, 'உங்களுக்குப் போர் வேண்டுமானால் போர், சமாதானம் வேண்டுமானால் சமாதானம்' என்று ஆணவக் கொக்கரிப்பு செய்தவரும் இந்த ஜே.ஆர்.தான். அப்போது இந்தியப் பிரதமராக இருந்த திருமதி இந்திராகாந்தி எச்சரித்ததால்தான் பின்னர் அடக்கி வாசித்தவர்.

இவரின் தர்பார் கொடிகட்டிப் பறந்தபோது, இவருடன் மிக நெருக்கமாக இருந்தவர்கள் காமினி திசாநாயக்கா, லலித் அத்துலத்முதலி ஆகியோர் என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்காக ராஜீவ்காந்தி வந்தசமயம், ஒரு கடற்படையைச் சேர்ந்தவனால் துப்பாக்கி பின்புறத்தால் தாக்கப்பட்டபோது ஜே.ஆர். உம் அவ்விடத்தில் நின்றிருந்தார். இந்திய இலங்கை ஒப்பந்தம் ஜே.ஆருக்கு விருப்பமான விடயமல்ல. ஆனால் தெற்கில் கிளர்ச்சிகள் அதிகரித்ததால், அதனை அவர் ஏற்றுக்கொண்டார்.

பிற்காலத்தில் பிரேமதாசா காலத்தில் செயற்பட்ட 'சிரா', 'பிறா', 'பச்சைப் புலிகள்' போன்ற அமைப்புக்கள் உருவாக்கப்பட்டதற்கும் ஜே.ஆரின் குண்டர் அரசியலே ஆரம்ப அடிப்படையாக இருந்தது. இதனை அறுவடை செய்து கொண்டவர் வாரிசு பிரேமதாசா.

இப்போது தேசிய வீரர் இறந்து விட்டதாக சரித்திர நாயகன் இறந்து விட்டதாக எல்லாம் சொல்லி அரற்றுகிறார்கள்.

இறந்தவர்களைப் பற்றி அவதூறாகஎதுவும் சொல்லக்கூடாது என்றால், இப்படிச் சொல்லலாம்: ஜே.ஆர்.இறந்ததற்காக நாம் சந்தோஷம் கொள்ளவில்லை, அவர் இருந்தபோதைப் போலவே.



தந்தை செல்வாவுடன் ஜே.ஆர்.

"இன்று இனத்துவம், இன விடுதலை, இனத் தூய்மை,என்ற பெயர்களால் - மத, மொழி, பண்பாட்டு, மரபின அடையாளங்களை முன்னிறுத்தி - போர்கள் நடத்தப்படும் நாடுகள் பெரும்பாலானவற்றில் துப்பாக்கிக் குழாய்களிலிருந்து பிறக்கும் கவிதைகளை விட, மரணக் குறிப்புகளாகவும், இரங்கற்பாக்களாகவும் வெளிப்படும் கவிதைகளே கூடுதலான முக்கியத்துவம் பெற்றுவிடுகின்றன. ஒருவரின் இன விடுதலை, இனத்துவ அடையாளம் என்ற பெயரால் நடத்தப்படும் போர்களில் பல அவரோடு நீண்ட நெடுங்காலமாய் வாழ்ந்துவந்த பிறரின், சிறுபான்மையினரின் அடையாளங்களை ஒடுக்குவதாய், பெண்களின் உரிமையை நசுக்குவதாய், செயற்கையான கட்டுப்பாடுகளை மறைநூல்களின் பெயரால் திணிப்பதாய், மாற்றுக் கருத்துகளுடையோர் மீது சகியாமை காட்டுவதாய், தான் விரும்பும் ஒற்றை வார்ப்பிலேயே அதை விரும்புபவர்கள், விரும்பாதவர்கள் ஆகிய அனைவரையும் வார்த்தெடுக்கத் தீர்மானித்துக் கொண்டவையாய் உள்ளன. எந்த எதிரியின் சகியாமைக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராகத் தொடங்கப்பட்டனவோ அந்த எதிரியின் அத்தனை விழுமியங்களையும் தூக்கிச் சுமப்பவையாகிவிட்டன...."

– சோலைக்கிளியின் 'பனியில் மொழி எழுதி' கவிதை நூலுக்கான முன்னுரையில் எஸ்.வி.ராஜதுரை, வ.கீதா.

## மூன்றாமவரின்....

(8ம் பக்கத் தொடர்ச்சி)

நபர்கள் விடுதலை என்ற போர்வையில் குளிர் காய்ந்தார்கள் என்பது யாவரும் அறிந்தது. சர்வதேச அவதானிகள் அறிக்கை, எல்.ரி.ரி.ஈ.யின் வெளிநாட்டு கிளைகளில் இருந்தவர்கள் சிறையில் இருப்பது, தற்போதும் சிறைசென்று கொண்டிருப்பது எல்லாமே பரகசியங்களாகும்.

ஆதுமாத்திரமன்றி, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மனித கடத்தல், வெளிநாடுகளுக்கு மறைமுக தமிழ்நாட்டு நட்சத்திர இறக்குமதி, திரைப்பட இறக்குமதி மூலம் நல்ல வருமானம் கிடத்தமையினாலும், குறிப்பிட்ட மக்கள் குழுவின் ஆதரவினாலும் புலிகள் கொழுத்த உள்நாட்டு சண்டியர் ஆயினர்.

தனது பணவலிமையால் எல்.ரி.ரி.ஈ., தன்னை பெரிய இயக்கம் என்றும் மற்றைய இயக்கங்களை சின்ன இயக்கங்கள் என்றும் தமது அரசியல் கூட்டங்களில் சொல்லித் திரிந்தார்கள். மற்றைய இயக்கங்கள் மீது அவதூறுகளைப் பரப்பினர். அவ் இயக்கங்களைத் தடைசெய்து அதன் தலைவர்களையும் கொலை செய்தார்கள். அக்காலகட்டங்களில் மாற்று இயக்கத்தினரும் மக்களும் எதிர்ப்புக் காட்டாமையினால் எல்.ரி.ரி.ஈ.யினர் தங்களுடைய நடவடிக்கைக்கு மக்கள் ஆதரவும் பயமும் இருக்கிறது என நினைத்தார்கள்.

உற்ற நண்பன் ஈரோஸ் புலியுடன் சேர மறுத்தமையால் அவர்களையும் தடைசெய்து தனது சண்டித்தனத்தை நிலைநாட்டியது. அது மாத்திரமன்றி ஈழவிடுதலையை முன்னின்று நடத்தக் கூடிய மாற்று இயக்க தலைவர்களை சிறையில் அடைத்தார்கள். உள்வீட்டுச் சண்டை காரணமாக கிட்டு, கிரனைட் வீச்சில் காலிழந்தபோது, துரோகிகள் ஊடுருவி விட்டார்கள் என்று பொய்க் காரணம் சொல்லி சிறை



யில் உள்ள மாற்று இயக்கத்தினரை சுட்டுத் தள்ளினார்கள். (நல்லூர் கந்தன் கருணைப் படுகொலை)

மாற்றுஇயக்கஆதரவாளர்களை நாட்டில் இருக்கவிட்டால் தங்களுக்கு எதிராக செயல்படுவார்கள் என நினைத்து நாட்டைவிட்டு வெளியேறச் சொன்னார்கள். மறுத்தவர்களை தங்கள் செலவில் தமிழ்நாட்டுக்கு கடத்தினார்கள். இவர்கள் இன்றும் தமிழ்நாட்டு அகதி முகாம்களில் வாடுவதை காணலாம்.

இப்படி எல்லாம் ஈழவிடுதலைப் போராட்டத்தை சிதறியடித்தார்கள் என்பது சிலபேருக்குத் தெரியாது போலும். அதனாலேயே இன்றும் எல்.ரி.ரி.ஈ. ஈழம் பெற்று தருவார்கள் என்று கனவு காண்கிறார்கள்.

எல்.ரி.ரி.ஈ.யின் துரோக நடவடிக்கைகளால் உயிர்பெற்று எழுந்த இலங்கை அரசு, தனக்குத் தேவையான உள்நாட்டு வெளிநாட்டு ஆதரவுடன் பெருந்தொகை இராணுவத்தை ஈடுபடுத்தி, ஈழ நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்துள்ளனர். அண்மைக்கால அறிக்கைகளின்படி கிளிநொச்சியையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

1987 கட்டத்தில் எல்.ரி.ரி.ஈ.யினரின் அதிகார வெறியினால் மாற்று இயக்கத்தினரை தடை செய்ததோடு, அதன் தலைவர்களை–பல உறுப்பினர்களை கொன்றும், சிறையிலடைத்துக் கொன்றும் காளியாட்டம் ஆடினர். பலரை நாடு கடத்தினார்கள். இன்று, பெரும்பலத்துடன் இராணுவம் முன்னேறும் போது தடுக்கமுடியாமல் புலிகளின் உறைவிடமான காடுகளை நோக்கி ஓடுகிறார்கள். இவர்கள் பின்வாங்குவதை கண்ட புலிவால்கள் பின்னால் ஓடுகிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க முடியாமையால் 87ல் மாற்று இயக்கத்தினரை தமிழ்நாட்டுக்கு கடத்திய மாதிரி, இப்போது தங்களின் ஆதரவாளர்களை கடத்துகிறார்கள்.

மக்களோ, முன்னாளில் விதைத்தவை எல்லாம் பின்னாளில் விளைகிறது என அங்கலாய்க்கிறார்கள்.

உண்மை நீதி தவறாமல் கருத்தை மக்களுக்குத் தெரியப்படுத்தி வருவீர்கள் என நம்புகிறேன்.

அன்புடன்,
இளம்பிறை, பரீஸ்.

படிப்பகம்

www.padippakam.com



## புதுமைப்பித்தன் சிறுகதை




சாயங்காலம்.

சிறு பசி என்ற நினைப்பைச் சாந்தி செய்ய ஒரு ஹோட்டலுக்குள் சென்றேன்.

கூட்டத்திலே இடம் கிடைப்பது கஷ்டம்தான்; எனினும், என் அதிர்ஷ்டம் ஒரு மேஜை காலியாயிருந்தது.

போய் உட்கார்ந்தேன்.

"என்ன சார் வேண்டும்?"

ஏதோ வேண்டியதைச் சொல்லிவிட்டு, என்னத்தையோ பற்றி யோசித்துக் கொண்டு இருந்துவிட்டேன்.

அவன் வைத்துவிட்டுப் போனதையும் கவனிக்கவில்லை.

மறுபடியும், "என்ன ஸார் வேண்டும்?" என்ற குரல் கேட்டது.

அவன் கேட்டது என்னையல்ல; என் எதிரிலிருந்த ஒருவரை. மெலிந்த தேகம்; கிழிந்த சட்டை, ஆனால் அழுக்கில்லை; கிழிசல் தைக்கப்பட்டிருந்தது. இரண்டு மூன்று வாரம் கத்தி படாத முகம் சோர்வடைந்திருந்தாலும் கண்களில் ஒரு விதப் பிரகாசம் தென்பட்டது.

கீழே குனிந்து, மேஜைக்கு அடியிலிருந்த கைகளைக் கவனித்துவிட்டு ஒரு பெருமூச்சுடன், (அது வெகுமெதுவாக வந்தது) "அரை கப் காபி!" என்றார்.

முகத்தில் 'பசி' என்பது ஸ்பஷ்டமாக எழுதியிருந்தது.

கையில் சில்லரையில்லை போலும்! இதனால் தான் கீழே கவனித்துப் பார்த்துக் கொண்டார். பார்ப்பானேன்? நினைவில் இல்லாமலா போய் விடும்? யாரோ என்னைப் போல் இலக்கிய உலகத்தில் வேலை செய்பவர் என்ற முடிவிற்கு வந்தேன். அவர்களுக்குத்தானே இந்தக் கதி வரும். சகோதரத் தொழிலாளி என்ற பாசம் ஏற்பட்டது. உதவி செய்ய வேண்டுமென்ற ஆசை. தர்ம உணர்ச்சியால் அல்ல, சகோதர பாசத்தால்.

எப்படி ஆரம்பிப்பது? கோபித்துக் கொள்வாரோ என்னவோ? பக்குவமாகச் சொல்லிப் பார்த்தால் என்ன குடி முழுகிப்போகிறது.?

"தங்களை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதே!" என்று மனமறிந்து பொய் கூறினேன்.

"பார்த்திருக்க முடியாது!"

இது தடையுத்தரவு மாதிரி இருந்தது. இருந்தாலும் இன்னொரு தடவை.

"எனக்குப் பசி பிராணன் போகிறதே! தங்களுக்கு உடம்பிற்கு என்ன?" என்று காப்பிக் கோப்பையைக் கூர்ந்து நோக்கினேன்.

"பசியாமல் ஏன் ஓட்டலுக்கு வரவேண்டும்?" என்றார்.

"மறந்து போயிருக்கும். அதனாலென்ன? நீங்கள் இன்று என்னுடைய விருந்தினராக இருக்க வேண்டும். இன்று என் பிறந்த நாள்!" என்றேன்.

"காசைக் கண்டபடி இறைக்காதேயும்" என்றார்.

"பாதகமில்லை, தயவுசெய்து...."

"சரி, உமதிஷ்டம்...." என்றார். இருவரும் குதூகலமாகச் சாப்பிட்டோம். குதூகலம் என்னுடையது; அவர் மௌனமாகத்தான் சாப்பிட்டார். இடையிலே இரண்டொரு வார்த்தை சிக்கனமாக இருப்பதைப் பற்றி. வெகு கூச்சமுள்ள பிராணிபோலும்! இந்த ரகத்தை எனக்கு நன்றாகத் தெரியும். இலக்கியத்தில் இது எதிர்பார்க்கக்கூடிய விஷயமே. மிகவும் கஷ்டப்பட்டவர் அதனால்தான் சிக்கனத்தில் அதிகக் கருத்து!

ஒரு குழந்தையைப் போஷிப்பதைப்போல மனம் கோணாமல் நாசூக்காகச் செய்தேன். 'பில்' ஏறக்குறைய ஒரு ரூபாயை எட்டிவிட்டது.

எழுந்திருந்தோம். மௌனமாக அவர் முன் சென்றார்.

பணத்தைக் கொடுக்கச் சில நிமிஷம் தாமதித்தேன்.

நேராக வெளியே சென்று ஒரு பளபளப்பான 'ஹில்மன்' காரில் கூசாமல் ஏறி உட்கார்ந்தார். அந்த மனுஷர்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. பைத்தியமோ என்ற சந்தேகம்.

மோட்டார் டிரைவர் இயற்கையான சாவதானத்துடன் காரை விட்டுக்கொண்டு போய்விட்டான்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை.

'ஹோட்டல் காஷியர்' என்னமோ தெரிந்தவர் போல் விழுந்து விழுந்து சிரித்தார்.

**இருவரும் குதூகலமாகச் சாப்பிட்டோம். குதூகலம் என்னுடையது; அவர் மௌனமாகத்தான் சாப்பிட்டார்.**

நான் விழித்தேன்.

"அவன் பெரிய லக்ஷாதிபதி. பெரிய கருமி, கஞ்சன். யார் தலையையும் தடவுவதில் – இந்தச் சாப்பாட்டு விஷயத்தில் தான் – ஒரு பைத்தியம். இன்று நீர் அகப்பட்டுக் கொண்டீர் போலிருக்கிறது!" என்றார்.

நானும் சிரித்தேன். எதற்கு என்று எனக்குத் தெரியாது.

"தர்மம் செய்வதில் எவ்வளவு கஷ்டம் உண்டு பார்த்தீரா?" என்றார்.

"நான் தர்மம் செய்யவில்லையே!" என்று சொல்லிவிட்டு வெளியே வந்தேன். ●



"என் கதைகள் – பேரளவு துன்பத்தின் சாயை படியாது வெறும் உயிர்ப் பிண்டமாக வாழ்ந்த ஒரு வாலிபன், திடீர் என்று உலகத்தில் இயல்பாக இருந்துவரும் கொடுமைகளையும் அநீதிகளையும், சமூகத்தின் வக்கிர விசித்திரங்களையும் கண்டு, ஆவேசமாக, கண்டதைத் தனது மன இருட்டில் தோய்த் துச் சொல்லிய பேய்க் கனவுகளாகும்."

– புதுமைப்பித்தன்

இந்த நூற்றாண்டின் முற்பாதியில் வாழ்ந்து மறைந்த, தமிழின் மகத்தான சிறுகதைக் கலைஞர் புதுமைப்பித்தன். காலத்தை எதிர்கொள்ள இயலாமல் பின்தங்கும் பெரும்பான்மையான படைப்பாளிகளைப் போலல்லாமல் காலத்தைக் கடந்துவரும் குரலாக புதுமைப்பித்தன் என்ற கலைஞன் தமிழ்க் கதையுலகில் பதித்திருக்கும் தடம் மிக அழுத்தமானது.

அழுகி நாற்றமெடுத்துக் கிடக்கும் சமூகத்தின் அசிங்கங்களைக் கீறிப்பிளந்து காட்டியது அவர் எழுத்து. "பலர் இலக்கியத்தில் இன்னதுதான் சொல்ல வேண்டும், இன்னது சொல்லக் கூடாது என ஒரு தத்துவம் இருப்பதாகவும், அதை ஆதரித்துப் பேசுவதாகவும் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கலாம். உண்மை அதுவல்ல. சுமார் இருநூறு வருஷங்களாக ஒருவிதமான சீலைப்பேன் வாழ்வு நடத்திவிட்டோம். சில விஷயங்களை நேர்நோக்கிப் பார்க்கவும் கூசுகிறோம். அதனால்தான் இப்படிச் சக்கரவட்டமாகச் சுற்றிவளைத்துச் சப்பைக்கட்டு கட்டுகிறோம். குரூரமே அவதாரமான ராவணனையும், ரத்தக்களறியையும், மனக் குரூபங்களையும், விகற்பங்களையும் உண்டாக்க இடமிருக்குமேயானால், ஏழை விபசாரியின் ஜீவனோபாயத்தை வர்ணிப்பதாலா சமூகத்தின் தெம்பு இற்றுப்போகப் போகிறது? இற்றுப்போனது எப்படிப் பாதுகாத்தாலும் நிற்கப் போகிறதா? மேலும், இலக்கியம் என்பது மன அவசத்தின் எழுச்சிதானே? நாலு திசையிலும் ஸ்டோர் குமாஸ்தா ராமன், சினிமா நடிகை சீதம்மாள், பேரம் பேசும் பிரமநாயகம் – இத்யாதி நபர்களை நான் தவறாமல் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, இவர்களது வாழ்வுக்கு இடமளிக்காமல், காதல் கத்தரிக்காய் பண்ணிக் கொண்டிருப்பது போன்ற அனுபவத்துக்கு நேர்முரணான விவகாரம் வேறு ஒன்றுமில்லை. நடைமுறை விவகாரங்களைப் பற்றி எழுதுவதில் கௌரவக் குறைச்சல் எதுவுமில்லை." என்று சொல்பவர் புதுமைப்பித்தன்.

உலக இலக்கியங்களில் ஆழ்ந்த தேர்ச்சி, வட்டார வழக்குகளையும் மக்களின் பேச்சு மொழியையும் தமிழில் முதன் முதலில் எடுத்தாண்டமை, சமுதாய விமர்சனக் கண்ணோட்டம், சமரிடுவதற்குச் சற்றும் தயங்காத போர்க்குணம், கேலியும் கிண்டலும் கலந்த, வேகமும் அழுத்தமும் படிந்த எழுத்து நடை போன்றன புதுமைப்பித்தனின் சிறப்பியல்புகள். தமிழ்ச் சிறுகதையில் ஆழ்ந்த, கனமான சிந்தனை வெளிப்பாடுகளை புதுமைப்பித்தன் அளவுக்கு வேறு யாரும் இன்னும் செய்யவில்லை என்றே சொல்ல வேண்டும்.

## அதிர்ஷ்டக்காரி

### குட்டிக்கதை

ஒருகாலத்தில் ஒரு சமயம் தேவதைகள் யாருக்கேனும் அருளை அள்ளி அள்ளித்தர நிச்சயித்தனர். ஒரு சிறுமியைக் கூப்பிட்டு "உன்னை ராணியாக்கியிருக்கிறோம்" என்றனர்.

சிறுமிக்கு ராணி என்றால் என்னவென்று தெரியாது. ஆயினும் ஏதோ நல்லதுதான் வருகிறது என்று தோன்றியதால் "நன்றி" என்று சொன்னாள்.

"உனக்கு நல்ல தகுதியுள்ள குணவான் ஒருவனை கணவனாகத் தருகிறோம்" என்றனர் அடுத்து.

"நன்றி". விளையாட உதவும் கூட்டாளி இருந்தால் வாழ்வு இனிதாக இருக்கும் என்று சிறுமிக்குத் தோன்றியது.

"உனக்கு ஐந்து குழந்தைகள் தருவோம். அவர்கள் மூலம் பதினேழு பேரப்பிள்ளைகளையும் அளிப்போம்".

எண்ணக்கூடத் தெரியாத சின்னப் பெண்ணிற்கு பதினேழு அதிகமாகப்பட்டது. ஆயினும் எல்லாமே நல்லதுக்குத்தான் என்று நினைத்தாள்.

"எதையாவது மறந்துவிட்டோமோ? ஆம் உனக்கு அழகையும் நீண்டஆயுளையும் அளிக்கிறோம்..."

பெண்ணிற்கு இத்துடன் வீட்டிற்கு செல்லலாம் என்று தோன்றியது. ஆனாலும் தேவதைகள் மேலும் சொன்னார்கள்.

"இந்த அருட்களுக்கு நீ முழு பொறுப்பாளியாக இருக்க வேண்டும் தெரிந்ததா?"

"சம்மதம்."

வரும் ஆண்டுகளில் எல்லாமே அருளியபடியே நடந்தது. வயது முதிர்ந்து, தேவதைகளை மறுபடியும் சந்திக்கும் நேரம் வந்துவிட்டது. கிழராணி என்ன பேசுவது என்று யோசித்து, எளிமையான ஒரு சொற்பொழிவைத் தயாரித்தாள்:

"நான் முடிந்தவரை ஒரு பொறுப்புள்ள ராணியாக பணியாற்றினேன். ஆயினும் இராஜ்யம் காலப்போக்கில் கைமாறிவிட்டது. என் சொத்துக்களும் குன்றிவிட்டன. குழந்தைகளும், பேரப்பிள்ளைகளும் ஏதோ நன்றாக இருக்கிறார்கள். என் அழகு, தேகநலம், அரசியல் செல்வாக்கு, ஆட்சி எல்லாமே காலப்போக்கில் க்ஷீணித்து விட்டன. இப்பொழுது என் நீண்ட வாழ்வும் முடிந்துவிட்டது. தேவதைகளே! நீங்கள் அளித்த வரங்களை நான் நீடித்துப் பொறுப்பாய் வைத்துக் கொள்ளாமைக்கு என்னை மன்னிக்க வேண்டுகிறேன்."

இதைக் கூறியவுடன் தேவதைகளின் கோபத்தைத்தான் எதிர்பார்த்தாள் செல்வாக்கிழந்த ராணி.

"ஆகவே பெண்ணே நீ தோல்வி அடைந்ததாக நினைக்கிறாய் அல்லவா?"

"ஆம் நீங்கள் எனக்கு அளித்த அதிகாரமும் செல்வமும் அழிந்து விட்டன.".

"நாங்கள் அளித்த பரிசுகளை சாஸ்வதமாக உபயோகிக்கலாம் என்றா நினைத்தாய்?"

"இல்லை."

"நீ முழுமையாக வளரவேண்டும் என்பதே எங்கள் அருள். உன் வரையில் நீ நன்றாகவே முயற்சி செய்தாய்."

"ஆயினும் கடைசியில் தோல்வி அடந்தேனே?"

தேவதைகள் சிரித்தார்கள் – "நீ என்ன கடவுளா தோல்வியே காணாமலிருக்க? வெறும் ராணி தானே!

நன்றி: சுனித்ராம்ஜோஷியின் "நீலக் கழுதைக் கதைகள்"

படிப்பகம்

www.padippakam.com



# புதுடில்லி அரசியல் தலைவர்களுடன் பிரேமச்சந்திரன் பேச்சுவார்த்தை. இந்தியாவுக்குள்ள தார்மீகக் கடமை வலியுறுத்தல்

புதுடில்லி சென்றிருந்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல்.கே.அத்வானி, மத்திய அமைச்சர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) அரசியல்பீட உறுப்பினர்களையும், இந்திய தேசிய காங்கிரஸ் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களையும் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினார்.

இந்த உரையாடல்களின்போது இலங்கையில் தமிழ் மக்கள் படும் சொல்லொணாத் துன்பங்களையும், மிகவும் மந்தகதியில் முன்னெடுக்கப்படும் அரசியல் தீர்வு யோசனை பற்றியும், அதில் உள்ள குறைபாடுகள் பற்றியும் பிரேமச்சந்திரன் விளக்கிக் கூறினார். அண்மையில் அதிகரித்துவரும் தமிழ் மக்களுக்கெதிரான அடிப்படை மனித உரிமை மீறல்கள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. இந்தியா, பாராமுகமாக இருக்காமல், இலங்கையில் சமாதானமும், தமிழ் மக்களுக்கு நீதியான தீர்வும் கிடைப்பதற்கான தனது பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்பதை சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியதுடன், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவிற்குள்ள தார்மீகக் கடப்பாட்டையும் நினைவுபடுத்தினார்.

இலங்கைப் பிரச்சினை பற்றி ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் தெரிவித்த கருத்துக்களைத் தமது கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் ஆராய்வதாகவும், ஈழத்தமிழர்களுக்கு நீதியான தீர்வு கிடைப்பதற்கு பாரதீய ஜனதா கட்சி எப்போதும் முன்நிற்கும் என்றும் அத்வானி உறுதி கூறினார். இப்பிரச்சினை குறித்து அரசு மட்டத்தில் பேசுவதாக அமைச்சர் பாலசுப்பிரமணியமும், கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களும் மற்றும் காங்கிரஸ் கட்சிப் பிரமுகர்களும் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் உறுதியளித்தனர்.

இந்தச் சந்திப்புகளின்போது, ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களான வளவன், இளங்கோவன் ஆகியோரும் புதுடில்லியிலிருந்து கலந்துகொண்டனர்.



09.11.96 அன்று வவுனியா நகரின் மையத்தில் மறியல் போராட்டம் ஒன்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியால் ஒழுங்கு செய்யப்பட்டது. இம் மறியல் போராட்டத்தில் சக இயக்கங்களான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழீழ விடுதலை இயக்கம் ஆகியன பங்குபற்றின. ஆட்டோ ஓட்டுநர் சங்கம் மற்றும் ஆண்களும் பெண்களுமாக பெருந்திரளான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

காலை 9.30 மணியளவில் வெளிவட்ட வீதியிலுள்ள ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் காரியாலயத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு வவுனியா நகரை வந்தடைந்து வவுனியா நகரில் பஸ் நிலையத்திற்கருகாமையில் உள்ள ஒரு பகுதியில் மறியல் போராட்டம் நடைபெற்றது. சக இயக்கத் தோழர்களான தமிழீழ மக்கள் விடுதலைக்கழக உறுப்பினர்கள், ஆதரவாளர்களும், தமிழீழ விடுதலை இயக்க உறுப்பினர்கள், ஆதரவாளர்களும் இங்கு இணைந்து கொண்டனர்.

பதாகைகளில் –

“அரசே! புலிகளே! உங்களது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளினுள் வரும் மக்களை கைதிகள் போல் நடத்தாதீர்!”

“அர்த்தமற்ற யுத்தத்தினால் அவல வாழ்க்கைதான் மிஞ்சும்.”

“அரசே உனது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளினுள் வரும் மக்களை கைதிகள் போல் நடத்தாதே.”

“கல்விச் சாலைகள் கல்விக்கே!”

“மக்களின் இதயங்களை வெல்வதற்கு வழி மக்களைச் சிறையிலடைப்பதல்ல.”

“புலிகளே! உங்கள் சிறைகளில் அடைக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோரின் கதி என்னாயிற்று?”

“அரசே! வடக்கில் காணாமல் போனோரின் கதி என்னாயிற்று?”

“அரசே! புலிகளே! யுத்தத்தை நிறுத்துங்கள்! சமாதான தீர்வு காண முன்வாருங்கள்!”

ஆகிய சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தன. வவுனியா நகரத்திலும் அகதி முகாம்களின் சுவர்களிலும் தமிழ் ஆங்கிலம் சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் இந்தச் சுலோகங்கள் தாங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் அதே இடத்திலேயே கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர் சாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் சார்பில் பிரச்சாரச் செயலாளர் தோழர் கிருபைராஜா அவர்களும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பில் மத்திய குழு உறுப்பினர் தி. சிறீதரன், ஈ.பி.ஆர்.எல்.எப். முக்கியஸ்தர் விசாகப் பெருமாள் அவர்கள், ஆட்டோ ஓட்டுனர் சங்க உபதலைவர் ஆகியோர் உரையாற்றினர்.

இயக்கங்களிடையே, தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமையின் அவசியம் அனைவராலும் வலியுறுத்தப்பட்டது. எதற்காகப் போராட்டம் என்பதனை தெளிவுபடுத்தும் வகையில் அறிக்கை ஒன்றும் வாசிக்கப்பட்டது.

20.11.96 அன்று இதே பிரச்சினைகளை முன்வைத்து, தமிழீழ விடுதலைக் கழகம் வவுனியா அரசாங்க அதிபர் காரியாலய வளவினுள் அடையாள உண்ணா விரதப் போராட்டத்தினை நடாத்தியது. அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்வரை, இத்தகைய போராட்டங்கள் தொடர்ந்தும் நடத்தப்படும்.








22. வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்